Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 20 புதன்கிழமை (05.08.2015) பக்கங்கள் 20 ஓசை – 308

## வெடிபொருட்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்.பூவரசந்தீவில் பெருமளவான வெடிபொருட்கள், எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

வியாபார நோக்கில் இங்கு பெருமளவான எறிகணைகள் புதைக்கப்பட்டுள்ளன.


மீனவர்கள் இளைப்பாறுவதற்காக அங்கு சென்ற வேளையில் இவை தென்பட்டதையடுத்து அது குறித்து யாழ்.போக்குவரத்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து அவ் வெடி பொருட்களை விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் நேற்று மீட்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இத்தீவு யாழ்.பூம்புகாரிலி

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு முதல்வருடன் முறுகல்

## மாகாண அமைச்சர்கள் சீற்றம்



(யாழ்ப்பாணம்)
**வடக்கில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருக்கும் நிலையில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் வடக்கு மாகாண அமைச்சர்கள் சிலருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருக்கிறது.**

**தேர்தல் பிரசார மேடைகளில் ஏறப்போவதில்லை என்றும வடக்கு முதலமைச்சர் என்ற அடிப்படையில் எந்தக் கட்சியின் பக்கமும் சாராமல் நடுநிலை வகிக்கப்போவதாக முதல்வர் விக்கி கூறியமை தொடர்பாகவே இந்த முறுகல் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.**

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலுக்குப் பின்னர் மகிந்தவின் நகர்வு என்ன?

### இருபக்கமும் இரகசிய தூது

(கொழும்பு)
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகர்களுக்கும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் முக்கிய ஆலோசகர்களுக்கும் இடையில் புல சுற்று இரகசிய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதியின் ஆலோசகர் அதுரலியே ரத்ன தேரரே, இரு தரப்புக்குமிடையில் இப் பேச்சு வார்த்தைகளை ஏற்பாடு செய்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ, குருநாகலை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகும் வாய்ப்புள்ள அதே நேரம், ஐக்கிய மக்கள் சுதந்திர

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்களை ஏமாற்றும் கூட்டமைப்பு மீது கண்டனம்

### அளவெட்டியில் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)
ஆட்சி மாற்றத்துடனான புதிய அரசை கொண்டு வருவதற்கு தாமே காரணமென கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்போது புதிய அரசு ஏமாற்றி விட்டதாக கூறி வருகின்றமை மக்களை ஏமாற்றும் அவர்களின் மற்றுமொரு தந்திரோபாயம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அளவெட்டி கிழக்கு கும்பலை கிராம மக்களை சந்தித்து நேற்றையதினம் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இங்குள்ள மக்கள் விடுத்த கோரிக்கைகள் நியாயமானவை என்பதுடன் அவற்றுக்கு தீர்வு

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் தேர்தல் வன்முறை தமிழரசுக்கட்சி மீது 8 முறைப்பாடுகள்

(கொழும்பு)
பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு கடந்த 3 வாரங்களில் 470 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கைப் படி 87 பாரிய சம்பவங்களும், 383 சிறிய சம்பவங்களும் 7 துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

பாரிய சம்பவங்களுள் 2 கொலைச் சம்பவங்களும், 22

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது தெரிவு செய்யும் கட்சியின் பெயர் மற்றும் இலக்கத்துக்கு முன்பாக அல்லது சுயேட்சை குழுவின் இலக்கத்தின முன்பாக புள்ளடி ("X") அடை

19 ஆம் பக்கம் பார்க்க

## ரிசாட் மீது அழைப்பாணை

(கொழும்பு)
வில்பத்து மீள் குடியேற்ற குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு . மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்துள்ளது.


சுதந்திர உரிமை கேந்திர அமைப்பு தாக்கல் செய்துள்ள மனுவை ஆராய்ந்ததன் பின்பே, எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம்

19 ஆம் பக்கம் பார்க்க



# கட்சியினால் வெளியேற்றப்பட்டவர்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் ஜெகன்



(யாழ்ப்பாணம்)

எமது கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எமது கட்சியில் இருந்து கட்சியின் கட்டுப்பாட்டு ஒழுக்க விதிகளை மீறியவர்களும், சமூக மற்றும் மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.

இவ்வாறு நீக்கப்பட்டவர்களில் ஒருவரான அச்சுவேலியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை செல்வராஜா (லிங்கேஸ்) என்பவர் இன்னொரு கட்சியில் இணைந்து தேர்தல் வேலைகளில் ஈடுபட்டு வரும் இதேவேளை, எமது கட்சிக்கு அவப்பெயரை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருவதாக அறிகின்றோம்.

இது மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக எமது மக்களே எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்று எமது கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட இன்னும் சிலர் தம்மை இன்னமும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் போல் அடையாளப்படுத்தி வேறு சில கட்சிகளின் சார்பாக தேர்தல் கால அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் தமது விருப்பப்படி இன்னொரு கட்சி சார்ந்தோ அன்றி தனித்துவமாகவோ செயற்படுவதற்கான ஜனநாயக உரிமையை நாம் என்றும் மதிப்பவர்கள். ஆனாலும் தமது அரசியல் செயற்பாடுகளின் போது தேவையற்ற முறையில் எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்துவதையோ அன்றி குழப்பகரமான செயற்பாடுகளில் ஈடுபடுவதையோ நாம ஒருபோதும் ஏற்க முடியாது.

ஆகவே, எமது கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முறையற்ற வாகன நிறுத்தம் பயணிகள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பேருந்து நிலையத்தினுள் ஒழுங்குமுறையற்று நிறுத்தப்படும் தனியார் பேருந்துகள் மற்றும் வேறு வாகனங்களினால் சுன்னாகம் மத்திய பஸ் நிலையத்தினுள் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றன.

சுன்னாகம் சந்தியிலிருந்து சுப்பிரமணியம் வீதியூடாக சுன்னாகம் மத்திய பேருந்து நிலையத்திற்குள் வரும் போக்குவரத்து சபை பேருந்துகள் பஸ் நிலையத்திற்குள் பிரவேசிப்பதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன.

பேருந்து நிலையத்தினுள் பேருந்துக்காக காத்திருக்கும் பயணிகள் சில சந்தர்ப்பங்களில் பேருந்தில் ஏறமுடியாது பேருந்துகளை தவறவிடுகின்ற சந்தர்ப்பங்களும் இந்நெருக்கடியால் ஏற்படுகின்றது.

சுன்னாகம் மத்திய பேருந்து நிலையத்திற்குள் பயணிகள் சேவை பேருந்துகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (66)

## முதியோருக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவு நாளை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வைத்து வழங்கப்படவுள்ளதால் தவறாது சமுகமளிக்குமாறு இக்கொடுப்பனவை பெறுமாறு கரவெட்டி பிரதேச செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (18)

# பாற்சபை ஊழியர்களுக்கு சம்பளம் இல்லை மாகாண அமைச்சர் ஐங்கரன் மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழில் பால் வழங்குநர்களுக்கு யாழ்கோ நிறுவனத்தினால் இன்று வழங்கவேண்டிய கொடுப்பனவு வழங்கப்படாத சூழ்நிலை காணப்படுகின்றது.

கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் யாழ். மாவட்ட கூட்டுறவு அபவிருத்திச் சங்கத்தின் தலைவரின் பதவிக்காலம் நிறைவுக்கு வந்துள்ளது.

தற்போது தேர்தல் காலம் என்பதால் புதிய தலைவரை நியமிக்க முடியாது என்பதை காரணம்காட்டி அதற்கான மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்காத துரதிஷ்டம் தொடர்கிறது.

இச்சங்கத்தின் நெறியாளர் குழுவில் 9 அங்கத்தவர்கள் காணப்படும் நிலையில் உப தலைவரை கொண்டு சங்கத்தின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஏதுநிலை காணப்படுகிறது.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அரசியல் இலாபம் கருதி இதற்கான எதுவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் இருப்பதுடன், இதற்கு மாவட்ட உதவி கூட்டுறவு உதவி ஆணையாளரும் உடந்தையாக தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறார் என குற்றம்சாட்டப்படுகிறது.

சங்கத்தின் செயற்பாடுகளை உரிய தலைமையினைக் கொண்டு தொடர்ந்து முன்னெடுக்கவும், பால் வழங்குநர்களுக்கான கொடுபனவை வழங்கவும் நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பால் வழங்குநர்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (120)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ். வீதியில் சுன்னாகம் சந்திக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இளம் பெண் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வயோதிபர் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் படுகாயமடைந்துள்ளார். (66)

# வருடாந்த மகோற்சவம்

சாவகச்சேரி கோயில்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் ஸ்ரீநடராஜ முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு மாம்பழத் திருவிழாவும், 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 4.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை மாலை 7.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை 11.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாணம், பூங்காவனத் திருவிழா என்பன இடம்பெறவுள்ளது.

தினமும் விழாக்கள் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையும் இடம்பெறுவதுடன், மாலை உற்சவங்கள் 5.00 மணி முதல் 9.00 மணிவரை நடைபெறவுள்ளன. (இ)

# வயல் விழா





(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் புதிய மற்றும் பயன்தரு விதைகளை அறிமுகம் செய்வது தொடர்பாகவும், விவசாயத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் விதமாகவும் 'வயல் விழா' என்னும் தொனிப் பொருளில் நேற்றைய தினம் நிகழ்வு இடம்பெற்றது.


குறித்த பயிற்சி நிலையத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்வில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







அண்மையில் காரைநகர் பிரதேச பாடசாலைகளின் 5 ஆம் ஆண்டுக்கான பொருட்காட்சி சுந்தரமூர்த்தி வித்தியாசாலையில் இடம்பெற்றபோது... (50)




காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத முருகப் பெருமானின் வருடாந்த தேர்த் திருவிழாவின் போது முருகப்பெரு மான் தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வருவதையும், பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்துவதையும் காணலாம். (50)

# ஜனநாயகப் போராளிகளின் பிரசாரக் கூட்டம்

## அனுமதி மறுத்த மானிப்பாய் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஒன்றிணைந்து அமைத்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சுதுமலை அம்மன் கோவில் வீதிச் சுற்றாடலில் வைத்து வெளியிடத் தீர்மானித்திருந்த போதிலும், அதற்கான கூட்டத்துக்குரிய அனுமதியை வழங்க மானிப்பாய் பொலிஸார் மறுத்தமையை அடுத்து அந்நடவடிக்கை தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

28 ஆண்டுகளுக்கு முன்னர், 1987 இல் ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று சுதுமலை அமமன் கோவில் சுற்றாடலில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உரையை ஆற்றியிருந்தார்.

அதே இடத்தில், அதே தினதில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவதற்கு முன்னாள் புலிகள் எடுத்த முயற்சி பொலிஸ் அனுமதி மறுப்புக் காரணமாக கைகூடாமற் போயுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும் புதிய இடம், திகதி குறித்து ஜனநாயகப் போராளிகள் கட்சி விரைவில் அறிவிக்கும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் விடுதலைப் புலிகளின் ஜனநாயகப் போராளிகள் கட்சி யாழ். மாவட்டத்தில் சிலந்திச் சின்னத்தில் சுயேச்சையாகத் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றமை தெரிந்ததே.

# சிவில் பாதுகாப்புக் கூட்டம்



சிவில் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிற்கு விளக்கமளிப்பதற்கான கூட்டம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நந்த நாராயண தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு, போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதன் அவசியம், சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்துவதில் பொதுமக்கள் - பொலிஸாரின் பங்களிப்பை விளக்கி நடைபெற்ற இக் கூட்டத்தில் சிவில பாதுகாப்புக் குழு பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டிருப்பதையும் காணலாம். (அ,18)

# மருத்துவ பீட மாணவர்களின் விடுதி அமைக்க நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களது தங்குமிட விடுதி அமைப்பதற்கான நிதி சேகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்காக முதற்கட்டமாக அளப்பருங்கருணை நாடகம் மேடையேற்றப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி எஸ். பாலகுமரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் விடுதியிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மருத்துவ பீடத்தில் கல்வி கற்பவர்களில் சுமார் 350 மாணவர்களுக்கு மட்டுமே போதுமான விடுதி வசதிகளே உள்ளன. இந் நிலையில் ஏனைய மாணவர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலே விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கி கல்வி கற்று வருகின்றனர்.

குறிப்பாக இங்கு கல்வி கற்பவர்களில் பெரும்பாலான மாணவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதால் வாடகை கொடுத்து தங்கியிருப்பது என்பது கடினமான விடயமாகும்.

எனவே தான் நாம் இதற்குத் தீர்வாக புதிய ஓர் விடுதியை அமைப்பதற்குத் தீர்மானித்தோம். இதற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள ஓர் தனியார் காணியை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளோம்.

இவ்விடயம் தொடர்பாக நாங்கள் யாழ். மருத்துவ பீடத்தின் பழைய மாண்வர்களுடன் பேசியிருந்தோம். அவர்களும இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்கள்.

மேலும் விடுதியமைப்பதற்கான நிதி அதிகப்படியாகவுள்ளதால் கலை நிகழ்வு ஒன்றை நடாத்தி அதனூடாக நிதியினைச் சேகரிக்க தீர்மானித்திருந்தோம்.

எனவே மருத்துவ பீட மாணவர்களின் கல்வியினை கவனத்தில் எடுத்து அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

குறித்த கலை நிகழ்வு எதிர்வரும் 8, 9 ஆம் திகதிகளில் யாழ். மருத்துவபீட கலையரங்கிலும் 12 ஆம் திகதி மாணவர்களுக்காகவும் இடம்பெறவுள்ளதுடன் 15 ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம் பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் காளான் உற்பத்தி ஊக்குவிப்புத் தொகை வழங்கல்

யாழ்.மாவட்டத்தில் காளான் உற்பத்தியில் ஈடுபட விரும்புவோருக்கு நவீன தொழில்நுட்ப உற்பத்திகளுடன் கூடிய பயிற்சியும் ஊக்கு விப்புத் தொகையும் வழங்கப்படுமென யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் காளான் உற்பத்தியில் ஈடுபடுவோர் எண்ணிக்கை குறைந்த அளவில் இருப்பதோடு காளான் பாவனை அளவு தற்போது அதிகரித்துள்ளது. இதற்காக யாழ்.மாவட்டத்துக்குத் தேவையான காளான் வெளிமாவட்டங்களிலிருந்து எடுத்து வரப்படுகின்றது. இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் காளான் ஒரு கிலோ 300 ரூபாவிலிருந்து 400 ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 22 பேருக்கு மேற்பட்டவர்கள் வர்த்தக நோக்கில் காளான் உற்பத்திச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் சிப்பிக்காளான் மற்றும் பால் காளான வகை தரமும் சுவையும் கொண்டவையாக இருப்பதால் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது என்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)



அன்ரனி அருள்ராஜசேகர்

(சாந்தன்)

மாவட்ட இணைப்பாளர் வவுனியா



X 1

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

உன்னைப்பற்றி சிந்திக்கத் தொடங்கு
உலகத்தவர்களின் நடிப்பு உனக்கு உடனே புரிந்துவிடும்.
- அன்புவழியூர்க் கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யார் வன்முறையாளர்கள்?

“28 வருடங்களுக்கு முன்பு அதாவது 1987–ம் ஆண்டு எங்கே, எப்பொழுது, யார், ஏன் சிறீதரனுக்கு அடித்தார்கள் என்பதை அவரால் நிரூபிக்க முடியுமா?” என்று சவால் விட்டு ஒரே சின்னத்தில் போட்டியிடும் தன் சக வேட்பாளரைக் கேட்டிருக்கிறார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு வேட்பாளரான சிவசக்தி ஆனந்தன்.

“தேர்தல் களம் சூடுபிடிக்கிறது” என்று பத்திரிகைகளில் செய்தி போடுவார்களல்லவா, அது இதுதான் போலிருக்கிறது. எதிர்க்கட்சிகளுடனான மோதலில்தான் தேர்தல் களம் சூடு பிடிப்பது,வழமை.

தங்களுக்குள்ளேயே சூடாகி கட்சிக்குள்ளேயே ஒருவரை மற்றொருவர் தாக்கி தேர்தல் மேடையில் விறுவிறுப்புக் காட்சியை உருவாக்கியிருப்பதிலும் கூட்டமைப்பே தன் முதன்மையை நிறுவுகிறது.

இவர்களும் கூட வழமையாக, தேர்தல் முடிந்து வேறு வேலைகளின்றி ஓய்வாக இருக்கும் காலங்களில்தான் தங்களுக்குள் எதிரிகளை விட மோசமாக ஆளுக்காள் அடித்துக் கொள்வார்கள்.

தேர்தல் வந்துவிட்டால், பொது எதிரிகள் மேல் சேறடித்து வீசுவதிலேயே தங்கள் வாக்குகளைத் திரட்டிக்கொள்ள வேண்டியிருப்பதால், சர்வதேசத்திற்குத் தமிழ் மக்கள் ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்று கேட்பதில் கூடிவைத்துப் பேசிக்கொண்டு வந்து முழங்குவார்கள்.

இந்தமுறை கூட்டமைப்பின் முன்னாள் எம்பிக்கள் நாலைந்து பேராவது நாடாளுமன்றக் கனவையும் அதில் கிடைக்கும் சொகுசுகளையும் இழக்க வேண்டி வரும் என்பதால், தங்கள் கையில் பிடித்திருக்கும் ஒற்றுமைக் கொடியாலேயே ஒருவருக்கொருவர் மண்டையில் போட ஆரம்பித்திருக்கிறார்கள்.

அரச மற்றும் இந்தியப் படைகளை விட 1987–ல் ஈ.பி.ஆர்.எல்.எவ் அடித்த அடிகள்தான் தனக்கு வலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லி, சுரேஷ் பிரேமச்சந்திரனின் நாடாளுமன்றக் கதிரையைப் பறித்துத் தான் அதில் போய் அமர்வதற்கான சண்டையைத் தொடக்கி வைத்தார் சிறீதரன் எம்பி.

அவ்வளவுதான், சுரேஷ் அணியினரின் தர்மாவேசம் சிங்கள அரசை, ஈபிடிபியை, கஜேந்திரகுமார் அணியை எல்லாம் விட்டுவிட்டு, சிறீதரனைப் பிடித்துக் கொண்டது.

சமஷ்டி, சர்வதேச அழுத்தம், நிலங்களை மீளப்பெறுதல், தீர்வைப் பெறுதல் என்பவையெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, வீட்டுக்குள்ளேயே ஒருவர் கதிரையை ஒருவர் பறிக்கும் சண்டை முன்னுக்கு வந்துவிட்டது.

“தான் செய்தவற்றையும், செய்ய இருப்பதைப் பற்றியும் தனது கொள்கையையும் விபரித்து வாக்குக் கேட்க முடியாமல், விருப்பு வாக்கில் பின்தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் கூட்டமைப்புக்குள்ளேயே சேறடித்துத் தாக்குகிறார் சிறீதரன்” என்று சிவசக்தி ஆனந்தன் சொல்கிறார்.

அதுமட்டுமல்ல, “வட்டக்கச்சியில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்க முற்பட்ட சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஆதரவாளர்கள் சிறீதரனின் ஆட்களால் அச்சுறுத்தப்பட்டுத் தாக்க முனைந்தபோது பொலிசார் தலையிட்டுத் தடுத்து நிறுத்தினர்” என்றும் அவர் சிறீதரன் எம்பியின் அடாவடிகளைத் தொடர்ந்து விபரிக்கிறார்.

விசயம் என்னவென்றால், இந்தக் கூட்டமைப்பினர் இதற்கு முந்தி, தாங்கள் அகிம்சாமூர்த்திகள் என்றும், அரச படைகளும் அரச ஆதரவுக் கட்சிகளும் வன்முறையைக் கையிலெடுத்து அப்பாவிகளான தங்களைத் தாக்குகின்றனர் என்று நீலிக்கண்ணீர் வடித்தே அனுதாப வாக்குகள் பெறும் முயற்சியைச் செய்து வந்தனர்.

இம்முறை கூட்டமைப்பிற்குள்ளே உள்ள, தமிழரசுக் கட்சியால் ‘ஆயுதக்குழு’ என்று அழைக்கப்படும் சுரேஷ் அணி சொல்கிறது, தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்பிதான் தேர்தல் வன்முறையில் ஈடுபடுவதாகவும், ஆட்களை வைத்துத் தாக்குதல்கள் நடத்துவதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறது.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என்று சும்மாவா சொன்னார்கள்!

# வங்குரோத்து அரசியலில் ஈடுபடுகிறது ஐ.தே.கட்சி

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

பாதாள உலகக் குழுவினரை கூலிக்கு அமர்த்தி, அவர்களது துணையுடன் ஐக்கிய தேசியக் கட்சி வங்குரோத்து அரசியலில் ஈடுபடுகின்றதென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் ஆதரவு நன்றாக குறைந்துவிட்டது. அதனால் அவர்கள் பல்வேறு வழிகளில் மக்களை அச்சுறுத்தி வாக்குகளை பெறும் முயறசியில் இறங்கியுள்ளனர்.

கடந்த 1988 மற்றும் 1989 காலபகுதியிலேயே, இவ்வாறு மக்களை அச்சுறுத்தி வாக்குகளை பெறும் வன்முறைக் கலாசாரம் காணப்பட்டது. வெள்ளை வான் கலாசாரமும் அப்போதுதான் உருவானது இது 1994ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. விஷேடமாக மகிந்தவின் காலமான 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இது முற்றாக இல்லாமல் செய்யப்பட்டது. அதனோடு சேர்த்து பாதாள உலகக் குழுவினரின் ஆதிக்கத்திற்கும் முடிவு கட்டப்பட்டது. சிலர் தப்பித்து வெளிநாடுகளுக்கு ஓடினர்.

ஆனால், அண்மையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தேர்தல் பிரசார கூட்டத்தில் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது. இதனை செய்தவர்கள் யாரென இன்று மக்களுக்கே தெரியும். ஆனால் அந்தப் பழியை எம்மீது சுமத்தப் பார்த்தனர்.

வேட்பாளர்களுக்கு பேரணிகளில் செல்லத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் தமது பேரணியில் 500 பேர் சென்றதாக ரவி கருணாநாயக்கவே கூறியிருந்தார். இங்கு தேர்தல் சட்டம் மீறபட்டுள்ளது.

அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிப் பிரயோகம் குறித்து உரிய விசாரணை நடத்தாமல், அமைச்சர் ஜோன் அமரதுங்க, டிலான் பெரேராவை விசாரிக்குமாறு கூறுகிறார்.

தம்மை சாதாரண மக்களில் ஒருவர் என்று கூறும் எடுத்த விடயங்களுக்கெல்லாம் நம்பிக்கை இன்றி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் இவர்கள், இன்று சாதாரண மக்களின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு பதில் கூறவேண்டும்.

அதுமட்டுமல்ல, பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு பிணையில் வர முடியாதவர்களை ஐக்கிய தேசியக் கட்சி பிணையில் எடுத்து அவர்களை தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக கேள்விப்பட்டேன். இவ்வாறு போதைப்பொருள், பாதாள உலகக் குழுவினரை பயன்படுத்தி இவர்கள் அரசியல் செய்கின்றனர்.

இவர்கள் சொல்வதெல்லாம் பொய். தமக்கு வேண்டப்பட்டவர்களை ஆட்சிக்கு கொண்டு வந்து நாட்டை நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் முகமூடியை கிழிக்கும் நாள் வந்துவிட்டது.

கம்புறுபிட்டி பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு அமைக்கப்பட்ட எமது கட்சிக் காரியாலயத்தை தியகொட பொலிஸார் அகற்றியுள்ளனர். காரணம் பொலிஸாருக்கும் அவற்றை செய்யுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. எனினும், இவற்றை கருத்திற்கொள்ளாது, சில பொலிஸார் தமது கடமையை சரிவரச் செய்கின்றமைக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# எவ்வித சாட்சியங்களும் இல்லை

புளுமெண்டல் துப்பாக்கிப் பிரயோக சம்பவமானது, பாதாள உலகக் குழுவினரால் நடத்தப்பட்டது என்பதற்கு எவ்வித சாட்சிகளும் இல்லையென பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் புளுமெண்டல் பகுதியில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவு பேரணியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமானது, பாதாள உலகக் குழுவினருக்கிடையிலான மோதல் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சம்பவத்தில் காயமடைந்து நேற்றைய தினம் உயிரிழந்த நிரோஷன் சம்பத் என்ற நபர் பாதாள உலகத்தை சார்ந்தவர் அல்லவென்றும், அவர் சாதாரண குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒருவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் குறித்த சம்பவம் தொடர்பில் தாம் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

புளுமெண்டல் சம்பவமானது ஐக்கிய தேசியக் கட்சியால் பாதாள உலகக் குழுவைக் கொண்டு நடததப்பட்ட திட்டமிட்ட தாக்குதல் சம்பவம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டை மக்களின் பொறுப்பை ஏற்றுக்கொள்வேன்

## சஜித் வாக்குறுதி

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் உள்ள அனைத்து குடும்பங்களின் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்வேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தொட்டை மாவட்ட வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வீரகெட்டிய - மொரயாய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஹேமா பிரேமதாசவும் கலந்து கொண்டார்.

இதன் போது சஜித் பிரேமதாச மேலும் தெரிவிக்கையில்

தான் அதிகாரத்திற்கு வந்தால் அது தருவேன் இது தருவேன் என ஒவ்வொரு மேடைகளிலும் சிலர் கூறித் திரிகின்றனர. இவற்றை நீங்கள் ஏற்க வேண்டாம. இந்த தேர்தல் வெற்றியுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 1,79,000 குடும்பங்களின் பொறுப்பையும் நான் ஏற்பேன் என கூறுகின்றேன். ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திற்கு பின்னர் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் நாட்டின் தலைமைத்துவத்தை நிட்சயமாக மொரயாயவிற்கு கொண்டு வருவேன் என தெரிவித்தார்.

# தேர்தல் ஆணையாளரின் கட்டளையை மீறியுள்ளார் பிரதமர் ரணில்

## பந்துல குற்றச்சாட்டு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் கட்டளையினை மீறி செயற்பட்டுள்ளதாக முன்னாள் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை கொள்ளை எனும் தொனிப்பொருளில் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க தேரதல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் கட்டளையினை மீறி செயற்பட்டுள்ளார்.


தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தடை விதித்துள்ளார்.

எனினும், ரணில் நாட்டின் பிரதமர் என்பதால் அவர் அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற்க முடியும் எனினும் அவரால் அங்கு உரையாற்ற முடியாது.

இந்தநிலையில் அவர் நேற்றைய தினம் அங்கு உரையாற்றியுள்ளார். இது தேர்தல் ஆணையாளரின் ஆணையினை மீறும் செயற்பாடாகும் என்றார்.

# மோசடி அரசியல்

சுகு-ஸ்ரீதரன்



**நெஞ்சு பொறுக்குதில்லையே - பாரதி**

சாதாரண வறிய இளைஞர்களை ஐரோப்பாவிற்கும்- வட அமெரிக்காவிற்கும் அனுப்புவதாக அல்லது மத்திய கிழக்கில் சிறந்த வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவதாக வறிய பெண்களை ஏமாற்றும் முகவர்களைப் போலத்தான்,

"தவித்த முயல் அடித்த" கணக்காக பணம் கறப்பதற்காக இவர்கள் இதனைச் செய்கிறார்கள்.

ஒருவிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மோசடி அரசியலும் இந்த வகைப்பட்டதே.

"பிரிவினையை ஆதரிக்கமாட்டோம்" என்று வழமையாக சத்தியப்பிரமாணம் செய்யும் இவர்கள்,

13 ஆவதை குப்பைக் கூடையில் போடவேண்டும், அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்று கூறும் இவர்கள் மாகாண-சபைத் தேர்தல்களையோ- உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல்களையோ கைவிடவில்லை.

தமிழ் மக்களை ஏமாற்றுவது - மோசடி செய்வதோடு, தமிழ் மக்களின் அரசியல் தமது தனிப்பட்ட உரிமை என்று இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆணவம் பிடித்த கனவான்கள் கருதுகிறார்கள்.

அதற்கேற்றபடியே தமிழ்மக்களும் செயற்படுகிறார்கள் - நடந்து கொள்கிறார்கள்.

13 ஆவது மற்றும் சில உரிமைகள் கிடைக்கப் பெற்றிருக்கிறது, தமிழ் மக்களின் பிரச்சினைகள் உலகறியச் செய்யப் பட்டிருக்கிறது என்றால் அது பல்வேறு தரப்பு இளைஞர் யுவதிகளின் தியாகத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களால், இந்தியாவின் தலையீட்டால் நிகழ்ந்தது.

அது ஒன்றும் சம்பந்தன் விக்கினேஸ்வரன் வகையறாக்கள் நிகழ்த்திய மந்திரவித்தைகளால் அல்ல.

இரண்டு தலைமுறைகளின் போராட்டத்தின் பலாபலன்களை இந்த கனவான்களும் அவர்களின் பரிவாரங்களும் அறுவடை செய்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களும் இந்த மோசடிப் பேர்வழிகளிடமே தமது தலைவிதியை ஒப்புவித்திருக்கிறார்கள்.

யாழ்மையவாத சமூக(?) சிந்தனைக்கு நன்றியற்ற இயல்பொன்றுண்டு.

அது இறந்தவர்கள் தியாகம் செய்தவர்களைப் பற்றி வாய்ப்பந்தல் போடும். ஆனால் தனது தலைவர்களாக திருடர்களையும் போலிக் கனவான்களையுமே அனேகமாக ஏற்றுக் கொள்ளும்.

புலம்பெயர் கனவான் நிறுவனங்கள் வரிசையாக இறந்தவர்களின் படத்தைப்போட்டு தமது ஊடகங்களில் -கருத்தரங்குகளில் -மனித உரிமைக் கூட்டங்களில் கண்ணீர் விடும். புகழாரம் சூட்டும்.. ஆனால் "காளாஞ்சியை" உள்ளூர் மற்றும் சர்வதேச திருடர்கள் கனவான்களுக்கே வழங்கும்.

அவர்கள் ஒரு சிறு கல்லைக் கூட தூக்கிப் போட்டிருக்க மாட்டார்கள்.

எத்தகைய வேறுபாடுகள் முரண்பாடுகள் இருப்பினும் அனைத்து இயக்கங்களில் இருந்து இறந்தவர்கள் அனைவரும் சாமானியர்களின் பிள்ளைகளே.

அவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன.

ஆனால் இவர்களின் பேரில் தலைவர்களாகி இருப்பவர்கள் லண்டனிலும்- ஒட்டோவாவிலும் பவுண்-டொலர் விருந்தில் திளைக்கிறார்கள்.

பிரபாகரனால் அடித்தளமிட்டு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்கள் சாதாரண நாட்களில் பிரபாகரன் பற்றி மூச்சு விடுவதில்லை.

ஆனால் தேர்தல் மேடையில் பாசாங்காக எங்கள் தலைவன் பிரபாகரன் என்று வலிப்பு நோய் கண்டவர்கள் போல் யாராவது கத்தும் போது மேடைக்கு முன்னால் இருப்பவர்கள் உருக்கொண்டவர்கள் போல் ஆடுகிறார்கள்.

"புலிகள் இருந்த காலத்தில் ரொறன்ரோ காசு கலெக்சன் - கழுத்து வடம் சங்கிலி வசூல் ராஜாக்கள் ஏற்பாடு செய்யும் கூட்டங்களில் ஒரு பெண் தலைவிரி கோலமாக இங்கு உள்ளூர் கோவில் வேள்விகளில் ஆடுவது போல மேடைக்கு முன்னால் சுழண்டு சுழண்டு ஆடி வருவா. வந்து மேடைக்கு முன்னால் தாலிக் கொடியை கழற்றி எறிவாவாம். அங்கு கூடியிருக்கும் மகாசனங்கள் -ஏமாளிகள் காசை வாரி இறைப்பார்களாம். அரிவரி தொப்பிவியாபாரி குரங்குகளின்ர கதைபோல."

கழுத்து வடம் சங்கிலியுடன் காசு கலெக்சன் செய்யும் திருடர்களால்- வசூல் ராஜாக்களால் அரங்கேற்றப்படும் நாடகம் இது. இது ஐரோப்பா- வட அமெரிக்கா எங்கணும் பரவலாக காணப்பட்டது.

இந்தத் திருட்டுக் கூட்டம், வசூல் ராஜாக்கள் புலிகளின் பணத்துடன் உலகம் முழுவதும் இலங்கை உட்பட சகல ஐசுவரியங்களுடனும் இப்போது வாழுகிறது.

ஆனால் புலிகள் உட்பட எல்லா இயக்கங்களிலும் இருந்த பிள்ளைகளின் குடும்பங்கள் தெருவுக்கு வந்ததும் வராத குறையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த திருட்டு கூட்ட வசூல் சக்கரவர்த்திகளின் மொடலில் தான் இங்கு தேர்தல் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

ஆயிரக்கணக்கான இளைஞர்களும் பெண்களும் மரணித்த போராட்டத்தின்

பெறுபேறு மக்களை அருவருக்கும் கபடதாரிகளான கனவான்களின் கையில் தமிழர்களின் தலைவிதி மாட்டுப்பட்டிருக்கிறது.

இவர்கள் கூறும் சுயநிர்ணய உரிமையும் -இறையாண்மை மீட்பும் 2016 இல் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிடுவோம் என்பதும் இவர்களின் பாரம்பரியமான ஏமாற்றின் மோசடியின் மறுவார்ப்பே. அடுத்த பொங்கல் தமிழீழத்தில், அடுத்த மேதினம் தமிழீழத்தில் என்பதுபோல.

பொய்- பித்தலாட்டம்- போகமுடியாத இடத்திற்கு வழி சொல்கிறார்கள்.

செப்ரெம்பர் ஐ.நா. மனித உரிமை அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

மனித உரிமைக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதை ஆழமாக சிந்தித்தால் அதிர்ச்சியான விடைதான் கிடைக்கும்!

இனவாத அடிப்படையிலானதும், சகோதரப் படுகொலைக்கானதுமான பாசிச கருத்தியல்ல இவர்கள் தான் உருவாக்கிக் கொடுத்தார்கள். இப்போதும் அதன் வழியே தான் செயற்படுகிறார்கள்.

எனவே ஐ.நா. அறிக்கையும் இதன் நதிமூலம் ரிஷி மூலத்தையும் உள்ளடக்க வேண்டும்.

பொய்யையும் போகமுடியாத இடத்திற்கு வழி சொல்வதுமான இந்த பாரம்பரியத்தை எல்லாப் பாதையும் ரோமாபுரிக்கே என்பதுபோல பாராளுமன்றம் புகுவதற்காக பயன்படுத்துகிறார்கள்.

இதுதான் உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கொள்கையற்ற -கபடமும்- -வஞ்சகமும் -குழிபறிப்பும் -களவாணித்தனமும் -அயோக்கியத்தனமும்- சுயநலமும்- மோசடியும் ஏமாற்றுமான ஒரு கதம்ப கூட்டத்தை உலகெங்கும் காணமுடியாது.

இதனை தலைமையென ஏற்றிவைத்திருக்கும் தமிழ்ச் சமூகத்தை என்னென்பது?

இவர்கள் பேரினவாதத்திற்கு தீனி போட்டு அதனை ஓயாமல் ஊதிப் பெருப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பேரினவாதத்தை இந்த உணர்ச்சியூட்டும் போதை அரசியல் பேணிப் பாதுகாக்கிறது.

கடந்த 30 ஆண்டுகளில் இலட்சக்கணக்கான மக்களின் மரணங்களுக்கும் இளைஞர், பெண்களின் மரணங்களுக்கும் இவர்கள் பொறுப்புச் சொல்லவேண்டும்.

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மரணித்தவர்களின் தொகையை எண்ணிக்கை கணக்கில் பட்டியலிட்டுள்ளனர்.

இவர்களின் ஏமாற்றுமோசடி அரசியல் தான் பேரினவாத அரசியலை பலப்படுத்தியது. தமிழ் பாசிச அரசியலை உருவாக்கியது.

பேரழிவிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் பிரதானமாக இவர்களே.

காலாகாலத்திற்கு "வாராது வந்துற்ற மாமணிகளாக" இந்த திருடர்களையும் கனவான்களையும் யாழ்.மையவாத தமிழ் அரசியல் கண்டு பிடித்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்த யுத்தமும் அழிவும் நிகழ்ந்த போது அலுங்காமல் நலுங்காமல் தமது கல்வியை மேற்கொண்டவர்கள், எதுவித சமூகப் பிரக்ஞையும் அற்றிருந்தவர்கள், கூழைக் கும்பிடு போட்டு கோள் மூட்டிச் சீவித்தவர்கள், நாலாந்தர வழிகளில் பணம் சம்பாதித்தவர்கள் எல்லோரும் இப்போது தமிழர்களின் தலைவர்கள்.

சமூகத்தின் நேர்மையல்ல இவர்களை, தலைவர்களாக உருவாக்குவது. யாழ்.மையவாத சமூகத்தில் நிலவும் களவாணித்தனம் தான் இவர்களை தலைவர்களாக உருவாக்குகிறது.

இன்று சகல விதமான நுகர்வுக் கலாசாரத்திற்கும் ஆட்பட்டிருப்பவர்கள், வாய்திறக்க முடியாத - எமது பிரதேசங்களுக்கு சுதந்திரமாக செல்லமுடியாத - அன்றாடம் படு-கொலைகள் பேரழிவு நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தை "அது ஒரு அழகிய காலம்" என்கிறார்கள்.

இந்த வேடதாரித்தனத்தை என்னவென்பது.

தமது மனச்சாட்சியின் படியா இவர்கள் பேசுகிறார்கள்?

சுயநிர்ணய உரிமையையும், இறையாண்மையையும் வென்றெடுப்பதற்கான பாதை பாராளுமன்றத் தேர்தல் என்கிறார்கள்!

ஆனால் இவர்களில் பலர் சுயநிர்ணய உரிமை- திம்பு கோரிக்கைகள் -13 ஆவது திருத்த சட்டமூலம் பற்றி இந்த சொற்களுக்கப்பால் எதுவும் தெரியாதவர்கள். இந்தக் கும்பலை தலைவர்களாகத் தெரிவு செய்யும் தமிழர்களை என்னவென்பது?

இந்தப் பேர்வழிகள் காலம் காலமாக பாராளுமன்றத்தில் தானே குடியிருக்கிறார்கள்.

அங்கு குடி இருப்பதற்காக எத்தகைய பேரழிவுப் பாதையைத் திறந்து விட்டார்கள். இது பற்றிய பிரக்ஞை எப்போதாவது இவர்களுக்கு இருந்ததா?

இன்று யுத்தத்தின் அவல வாழ்வில் மிச்ச மீதியாக இருக்கும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள்,

இராணுவமயமாக்கலில் இடம்பெயர்ந்த குடும்பங்கள்,

காணாமற் போனவர்கள்,

சிறைகளில் வாடுபவர்கள்,

புலம் பெயர்ந்து தமிழக அகதி முகாம்களில் வாழ்பவர்கள்

எல்லாரையும் விற்று தமது அதிகாரக் கதிரைக் கனவுகளை நிறைவு செய்கிறார்கள். அப்பட்டமான சொந்த நலன்களுக்காக இரத்தமும் சதையுமான மக்களின் பிரச்சினைகளுடன் விளையாடுகிறார்கள்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பாதுகாப்பு, பொருளா-தார மேம்பாடு என்பவற்றுக்காக என்ன செய்திருக்கிறார்கள். ஒரு மில்லியன் பேரை புலம் பெயர் சமூகமாக கொண்டுள்ள சமூகத்திலிருந்து உள்ளூர் வளங்களிலிருந்து சர்வதேச உதவிகள் அரச உதவிகளிலிருந்து எதையெல்லாம் செய்திருக்க முடியும்.

அப்படியான ஈடுபாடான மனப்பாங்கு இவர்களுக்கு இருக்கிறதா?

19 ஆவது 20 ஆவது என அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசப்படும் காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு இவர்கள் என்ன முயற்சியை மேற்கொண்டார்கள்.

தமிழ் மக்கள் சுயமரியாதை -கண்ணியத்துடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான திட்டம் ஏதாவது இவர்களிடம் இருக்கிறதா?

நிலமற்றவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணல், கிராமங்களின் வீதிகளைச் செப்பனிடல், சுகாதார வசதிகளை விருத்தி செய்தல், கல்வி இலவசமாக அனைத்து மட்டங்களிலும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்,

தண்ணீர் வளத்தை பாதுகாப்பது, விருத்தி செய்வது, மாசடைதலில் இருந்து மீட்பது, தடுப்பது சேமிப்பது உள்ளிட்ட விடயங்களில் விரிவான அறிவு கிடையாது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் பிரிவினைவாதத்திற்கு இடமளிக்கப்பட மாட்டாது

## - முன்னாள் ஜனாதிபதி மகிந்த சூளுரை -

நாட்டில் பிரிவினைவாதத்திற்கு இடமளிக்கப்படமாட்டாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் 61 சிவில் அமைப்புக்கள் நேற்றுமுன்தினம் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு கருத்து தெரிவித்த அவர், 19 ஆம் திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை களைதல், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தல், மெய்யான பொருளாதார நிவாரணத்தை மக்களுக்கு அளித்தல், பௌத்த வழிபாட்டுத் தளங்களை பாதுகாத்தல், உள்நாட்டு உற்பத்தியை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குதல் ஆகிய நிபந்தனைகளுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஹலால் பிரச்சினை, அளுத்கம சம்பவம் போன்ற பிரச்சினைகள் குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டுமென சிவில் அமைப்புக்கள் கோரியுள்ளன.

சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படக் காரணமாக இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தண்டிக் கப்பட வேண்டுமென வலியுறுத் தப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தவிர்ந்த புதிய நாடு ஒன்றை ரணில் விக்கிரமசிங்க உருவாக்குவார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சமஷ்டி ஆட்சி முறைமைக்கு ரணில் இணங்கியுள்ளார்.

வடக்கு கிழக்கில் சமஷ்டி முறைமை ஆட்சி நிறுவப்பட்டால் அந்தப் பகுதிகளை மீளவும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் எனவும் அவர் இதன்போது எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அவுஸ்ரேலிய அரசாங்கம் பயண எச்சரிக்கை

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு அவுஸ்ரேலிய அரசாங்கம தனது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் இலங்கையில் வன்முறைகள் வெடிக்கக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு பயணங்களை மேற்கொள்ளும் தமது நாட்டுப் பிரஜைகள் மிகவும் நிதானத்துடன செயற்பட வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் மோதல்கள் போராட்டங்கள் இடம்பெறக் கூடும்

போராட்டங்கள் நடாத்தப்படலாம் போராட்டங்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைக குண்டுகளை பயன்படுத்த நேரிடலாம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் வன்முறைகள் வெடிக்கலாம

ஊடகச் செய்திகளை கவனிப்பதுடன் உள்நாட்டு அதிகாரிகளின் ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டும்.

வீதித் தடைகள் போடப்பட்டு பாதுகாப்புப்படையினர் திடீர் சோதனைகளை நடாத்தக் கூடும் எனவும் அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# சமஷ்டி முறையில் நிரந்தர தீர்வுக்கு எதிர்காலத்தில் பேச்சு நடத்த தயார்

## - கூறுகின்றார் மகிந்தவின் ஆலோசகர் -

சமஷ்டி அடிப்படையில் நிரந்தர அரசியல் தீர்வு குறித்து எதிர்காலத்தில் பேச்சுக்களை முன்னெடுக்கத் தயார் என மகிந்த ராஜபக்சவின் ஆலோசகர் தயான ஜய திலக தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் சமஷ்டி விடயம் தொடர்பில் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இணைந்த வடகிழக்கில் சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறையிலேயே அரசியல் தீர்வு கிடைக்கவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. சமஷ்டி என்ற விடயத்திற்கு நாம் எதிரானவர்களல்ல. சமஷ்டி என்பது பல்வேறு வகையில் காணப்படும் ஆட்சி முறையாகும். சர்வதேசத்தில் சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி நடைபெறும் நாடுகள் பலவுள்ளன. குறிப்பாகக் கூறுவதானால் எமது அண்டை நாடான இந்தியாவில் கூட சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறையே காணப்படுகின்றது.

பிராந்தியங்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் சமஷ்டியை மட்டும் அடிப்படையாகக் கொண்ட தீர்வுக் கோரிக்கையை முன்வைக்கும் பட்சத்தில் நாம் அதுகுறித்துப் பேசத் தயாராகவுள்ளோம். ஆனால் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தை ஏற்க முடியாது. இது ஐக்கிய இலங்கையை பிளவுபடுத்தும் விடயமாகும். இணைந்த வடகிழக்கில் சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கை பிரிவினையையே குறித்து நிற்கின்றது. இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே அவர்களின் கோரிக்கை பிரிவினையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

யூலை 25ஆம் திகதி மருதனார்மடம் சந்திக்கருகில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டிலிருக்கும் அக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேடையில் அமர்ந்திருந்த போது பிரபாகரன் பற்றி அதிகமாக பேசப்பட்டது. அதன்போது அங்கு கூடியிருந்தோர் கரகோஷம் எழுப்பி ஆரவாரித்திருந்தனர். இந்நிகழ்வைப் பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரபாகரன் மீண்டும் அவதாரம் எடுத்துள்ளார் என்ற நிலைமையே உள்ளது.

இக்கூட்டத்தில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தொடர்பாக எவரும் பேசவில்லை. பிரிவினையைக் கோரிய பிரபாகரன் தொடர்பிலேயே அதிகமாகப் பேசினர். இக்கூட்டம் பொங்கு தமிழ் நிகழ்வு போன்றே இருந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

# எமது கிராமங்களில் இவை கிடையாது

## - முன்னாள் எம்.பி நலீன் பண்டார -



(கொழும்பு)

எமது கிராமங்களில் முட்டாள் எருமைகள் எவரும் கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார தெரிவித்துள்ளார். நன்றாக சோறு சாப்பிடும் மக்களே இருக்கின்றார்கள்.

அம்பாந்தோட்டையிலிருந்து மாத்தளைக்கு ஆறு கிலோமீற்றர் பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதையில் அதிகளவில் தல கொயாக்கள் மற்றும் மயில்களே பயணம் செய்கின்றன. இந்தப் பாதையில் எள்ளு மற்றும பயறு போன்றன காயவிடப்படுகின்றன.

குருநாகல் மாவட்டத்தில் அரச பரம்பரை இரத்தமுடையவர்களே வாழ்ந்து வருகின்றனர். தற்போது தான் மகிந்த நெல்லைக் கொள்வனவு செய்ய 25000 ரூபா சம்பள உயர்வு குறித்து பேசுகின்றார்.

வீதி ஓரங்களில் 200-300 பேரைக் கூட்டி பேசுகின்றார். வெட்கமாக இருக்கின்றது மஹாராஜாவே!

எமது கிராமங்களில் முட்டாள் எருமைகள் எவருமில்லை என தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நலீன் பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

( தேர்தல் மாவட்டம் வன்னி )



அ.ஜெயராஜ்



X 2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# கட்சித்தாவல்களை தடுக்க நடவடிக்கை எடுக்க முடியாது

## - இலங்கை மனித உரிமை ஆணைக்குழு -

தேர்தலின் பின்னரான கட்சித் தாவல்களை தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்சித் தாவல்களில் ஈடுபடுவதனை தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட முடியாது என ஆணைக்குழுவின் செயலாளர் நிமால் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார.

நாட்டின் தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் கட்சித் தாவல்களை தடுக்கக் கூடிய சாத்தியங்கள் கிடையாது

சுயாதீனமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல்களை நடாத்த சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

எவ்வாறெனினும் ஒரு கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டி அதன் பின்னர் கட்சித் தாவல்களில் ஈடுபடுவதனைத் தடுக்க மனித உரிமை ஆணைக்குழுவினால் எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவை புறக்கணித்து செயற்பட்டது

## - அனுர பிரியதர்சன யாப்பா தெரிவிப்பு -

மகிந்த ராஜபக்ஷ அரசு இந்தியாவைப் புறக்கணித்து செயற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா. குருநாகலில் உள்ள தனது இல்லத்தில் வைத்து, "தி இந்து" நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "எப்படி இந்தியாவைப் புறக்கணிக்க முடியும்? உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பெரும்பாலான இலங்கையின் இறக்குமதிகள் இந்தியாவில் இருந்துதான் மேற்கொள்ளப் படுகின்றன.



பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். பெருமளவு இந்திய நிறுவனங்கள் இங்கு செயற்படுகின்றன. பிரதம நிறைவேற்று அதிகாரிகளாக இந்தியர்கள் உள்ளனர். எமது நாட்டைத் துரிதமாக அபிவிருத்தி செய்வது பற்றியே நாம் சிந்தித்தோம். அபிவிருத்தியை வேகப்படுத்துவதே எமது தேவையாக இருந்தது. இதனால் தான் சீனாவின் பங்கு நாடப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அணிசேரா கொள்கையே பின்பற்றப்பட்டது. எவருக்கு எதிராகவும் எவருடனும் அணிசேருவதில்லை என்ற கொள்கையே முன்னைய அரசின கொள்கையாக இருந்தது. அதே கொள்கையையே மீண்டும் மீண்டும் நாம் பின்பற்றுவோம். இந்தியாவுடன் உள்ளதைப் போலவே சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வரலாற்று ரீதியான உறவுகள் இருந்தன" என்றார்.




# வவுனியாவில் அதிகரிக்கும் போலி வைத்தியர்கள்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக போலி வைத்தியர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் பொது மக்கள் வழங்கிய தகவல்களையடுத்து வவுனியா மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் போலி வைத்தியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு தயாராகி வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் எம்.எம்.எம். அனஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தில் சுகாதார தரத்தினை முன்னேற்றுவதற்கு தமது சங்கத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒததுழைப்பு வழங்கியுள்ளதாகவும், அண்மைக்காலங்களில் போலி வைத்தியர்களின் செயற்பாடுகள் காரணமாக பொதுமக்கள் சில அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் பொது மக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இப்போலி வைத்தியர்களை இனங்கண்டுள்ளதாகவும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும, அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆயுரவேத் வைத்தியர்கள் சிலர் நுண்ணுயிர் கொல்லி வில்லைகளை பொது மக்களுக்கு வழங்கியுள்ளனர.

எனினும் இச் செயறபாடு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரு நோயாளிக்கு ஆயுர் வேத. வைத்தியர்கள் நுண்ணுயிர் கொல்லி வில்லைகளை வழங்குவதையோ, ஊசி மூலமான மருந்துகளையோ பயன்படுத்த முடியாது குறைந்த பட்சம் வில்லைகளை நோயாளிக்கு வழங்கும்போது அளவுகள், அதன் தன்மை, செயற்பாடுகள் பற்றி தெரிந்திருக்கவேண்டும்.

அத்துடன் ஆயுர்வேத வைத்தியர்களின் காட்சிப்படுத்தல் விளம்பரப்பலகையில் தமது படிப்பு, பட்டம் முற்றிலும் மாறுபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களில் கற்கை நெறியினைப் பயின்று இலங்கை மருத்துவசபையில் பதிவு செயயப்படாமல் சிகிச்சையளிப்போர் தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதாகவும் இவ்வாறு செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தயாராகி வருவதாகவும் இவ்விடயத்தில் பொதுமக்கள் போலி வைத்தியர்களை இனங்கண்டு செயற்படுமாறும் அவற்றினால் ஏற்படும் விபரீதங்களிலிருந்து விலகி இருக்குமாறும் தெரிவித்துள்ளார்.

# தென்மராட்சி பாதைகளின் திருத்த வேலைகள் மும்முரம்

(தென்மராட்சி)

தென்மராட்சி, சாவகச்சேரி, மட்டுவில் கிராமங்களில் உள்ள பல வீதிகள் நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் அவை தற்போது துரிதமாக திருத்தப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மட்டுவில் கிராமத்தில் உள்ள சில வீதிகளில் பயணம் செய்யும் போது பயணிகள் வீழ்ந்து எழ வேண்டிய தன்மை கொண்டதாகக் காணப்பட்ட வீதிகளை புனரமைக்க வேண்டும் என மக்கள் அரசிற்கு பல முறை கோரிக்கைகள் விடுத்திருந்தனர்.

இருப்பினும் நீண்ட காலங்களின் பின்னர் அரசின் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தற்போது துரிதமாக புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## பழுதடைந்த வாய்க்கால்

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன் வீதியில் உள்ள கழிவு வாய்க்கால் நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் உள்ளமையால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கழிவு வாய்க்காலில் தேங்கும் குப்பை கூழங்கள் நிறைந்து காணபபடுவதால் கழிவு நீர் வழிந்தோட முடியாத நிலையில் துர்நாற்றம் வீசுவதாகவும், தொற்றுநோய் ஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதனை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(66)




# யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளை தரப்படுத்துவதற்கான போட்டிகள்

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளை தரப்படுத்தும் வகையில் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 24 கழகங்களும் எட்டுக் குழுக்களாக பிரிக்கப்பட்டு இந்தப் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் கிரிக்கெட் சங்கத்தினால் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அணியும் தலா இரண்டு போட்டிகளில் மோதவுள்ளன. இதில் இரண்டு போட்டிகளிலும் தோல்வியுறும் எட்டு அணிகள் சி பிரிவிலும் இரண்டாம் சுற்றில் விளையாடி தோல்வியுறும் எட்டு அணிகள் பி பிரிவிலும் காலிறுதிக்கு முன்னேறிய எட்டு அணிகளும் எ பிரிவிலும் முதற்கட்டமாக தெரிவு செய்யப்படவுள்ளன. அணிகளின் விபரம் வருமாறு

குழு ஏ -யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

குழு பி யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகம் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மணல்தறை றெயின்போ விளையாட்டுக் கழகம்.

குழு சி திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டுக் கழகம்(வை.எம்.ஏச்.எ) மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் சாவகச்சேரி றிபேக் விளையாட்டுக் கழகம்.

குழு டி தெல்லிப்பளை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் (கே.சி.சி.சி.) யாழ்ப்பாணம ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

குழு இ சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகம்.

குழு எவ் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்டஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வலிகாமம் யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

குழு ஜி வண்ணார்பண்னை ஸ்ரீ காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம் தெல்லிப்பளை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை ஹாட்லிஸ் விளையாட்டுக் கழகம்.

குழு எச் கந்தர்மடம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் குருநகர் விங்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம்.

ஆகியன இடம் பெற்றுள்ளதாகவும் இதற்கான போட்டிகள் இந்த வாரம் முதல் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

# ஜெயவர்த்தனவின் கல கல வீடியோ



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜெயவர்த்தன தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு கொமடியான கலகல வீடியோவை பதிவிட்டுள்ளார்.

பொதுவாக கிரிக்கெட், கால்பந்து, ரென்னிஸ் என அனைத்து போட்டிகளின் போதும் பெட்டிங்கில் ஈடுபடுபவர்கள் மைதானங்களில் நிர்வாணமாக அங்கும் இங்கும் ஓடுவர்.

இவர்களை மைதான பாதுகாவலர்கள் விரட்டிப் பிடிப்பர். இந்த நிகழ்வை மையமாக வைத்து வெளியாகியுள்ள ஒரு வீடியோவை தான் ஜெயவர்த்தன தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

இந்த வீடியோவில் நிர்வாணமாக சிலர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டுள்ளனர்.அப்போது உடை அணிந்த ஒருவர் நிர்வாணமாக கிரிக்கெட் விளையாடும் வீரர்களுக்கு இடையூறு கொடுக்கும் வகையில் அங்கும் இங்கும் ஓடுகிறார்.

பின்னர் மைதான பாதுகாவலராக ஒருவர் அவரைப்பிடிக்க ஓடுகிறார். அவரும் நிர்வாணமாகவே இருக்கிறார். இந்த கலகல வீடியோவை ஹா..ஹா.. ஹப்பி சண்டே எனக் குறிப்பிட்டு வெளியிட்டிருக்கிறார் ஜெயவர்த்தன.

# இந்திய அணி கொழும்பில்

(கொழும்பு)

விராட்ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, இலங்கையில் 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்திய-இலங்கை அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலியில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையும், 2 ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையும், 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரையும் நடக்கிறது. இந்த போட்டித்தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி, கொழும்பு வந்தடைந்தது.

இந்திய அணியினர் விமான நிலையத்தில் இருந்து நேராக தாங்கள் தங்கும் நட்சத்திர ஹோட்டலுக்குச்சென்று ஓய்வு எடுத்தனர். இந்திய-இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் லெவன் அணிகள் மோதும் பயிற்சி ஆட்டம் கொழும்பில் நாளை முதல் 8ஆம் திகதி வரை நடக்கிறது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)



குலசிங்கம் திலீபன்
முதன்மை வேட்பாளர்



X

4

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# உலக நீச்சல் போட்டி கதே புதிய சாதனை

உலக நீச்சல் போட்டியில் பெண்களுக்கான 1500 மீற்றர் பிரீஸ டைல் பந்தயத்தில் அமெ ரிக்க வீராங்கனை கதே லெடெக்கி புதிய உலக சாதனை படைத்தார். 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலக நீச்சல் சம்பியன் ஷிப் போட்டி ரஷ்யாவில் உள்ள கசன் நகரில் நடந்து வருகிறது. இதில் 190 நாடுகளைச் சேர்ந்த 2,400 வீர,வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 1,500 மீற்றர் பிரீஸ்டைல் பந்தயத்தில் தொடக்க சுற்றில் அமெரிக்க வீராங்கனை கதே லெடெக்கி 15 நிமிடம் 27.71 வினாடியில் பந்தய தூரத்தைக்கடந்து புதிய உலக சாதனை படைத்து அசத்தி அரை இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

18 வயதான கதே லெடெக்கி தனது சொந்த சாதனையை தகர்த்து புதிய உலக சாதனை படைத்தார். இதற்கு முன்பு 2014-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடந்த பான் பசிபிக் சம்பியன்ஷிப் போட்டியில் கதே லெடெக்கி 15 நிமிடம் 28.36 வினாடியில் பந்தயத்தூரத்தை கடந்ததே உலக சாதனையாக இருந்தது.



1,500 மீற்றர் பிரீஸ்டைல் பந்தயத்தில் கதே லெடெக்கி தனது உலக சாதனையை நொருக்குவது இது 4 ஆவது முறையாகும் கதே முந்தைய நாளில் 400 மீற்றர் பிரீஸ்டைல் பந்தயத்தில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. 2013 ஆம் ஆண்டு உலக போட்டியில் கதே முதல் முறையாக உலக சாதனை படைத்தார்.

# நண்பருக்கு திருமணப்பரிசாக தீவைக் கையளிக்கும் ரொனால்டோ

போர்த்துக்கல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது நண்பருக்கு திருமணப்பரிசாக கிரீஸ் தீவை வழங்க முடிவு செய்துள்ளார்.

ரொனால்டோவின் நெருங்கிய நண்பரும், கால்பந்து ஏஜெண்டுமான ஜோர்ஜ் மென்டேஸ்க்கு சமீபத்தில் தான் திருமணம் முடிந்தது.

அவருக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று யோசித்த ரொனால்டோ வித்தியாசமான முடிவை எடுத்துள்ளார்.

கிரீஸ் நாட்டுக்குச் சொந்தமாக ஏகப்பட்ட தீவுகள் உள்ளன. அந்த நாட்டில் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதைத் தொடர்ந்து தீவுகளை விற்று வருகின்றனர்.

இதனால் ரொனால்டோவும் ஒரு தீவை விலைக்கு வாங்கி,



அதை தனது நண்பருக்கு திருமணப் பரிசாக அளிக்கவுள்ளார்.

அதிக வருமானம் ஈட்டும் வீரராக உள்ள ரொனால்டோ பலருக்கும் பல உதவிகளை செய்து வருகிறார்.இந்நிலையில் தனது நண்பருக்காக ஒரு தீவையே பரிசளிக்கவுள்ள ரொனால்டோவின் இந்த தாராள மனதைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

# நடால் முன்னேற்றம்

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலின் படி ஆண்கள் ஒற்றையர் பிரிவிற்கான தரவரிசையில் ரபேல் நடால் 10ஆவது இடத்தில் இருந்து 9ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். செர்பிய வீரர் ஜோகோவிக் 13845 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறார்.

கடந்த சில மாதங்களாக மோசமாக விளையாடியதன் காரணமாக நடால் தரவரிசையில் 10ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். ஆனால், நேற்று முன்தினம் முடிவடைந்த ஹம்பர்க் ஓபனில் சம்பியன் பட்டம் வென்றார். இந்த வெற்றியின் மூலம் இன்று வெளியிடப்பட்ட தரவரிசையில் 3410 புள்ளிகள் பெற்று 8ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

முதல் 10 இடத்தை பிடித்துள்ள வீரர்கள் விபரம் வருமாறு:-

இதன்படி ஜோகோவிச் (13845). ரோஜர் பெடரர் (9665) அண்டி முர்ரே (7840)வாவ்ரிங்கா (5790)கெய் நிஷிகோரி (5525). தோமஸ் பெர்டிச்(5140) டேவிட் பெரர் (4325)மரின் சிலிச் (3495)ரபேல் நடால் (3410). மிலோஸ் ரயோனிக் (3400)

# வடமராட்சி வலய போட்டிகள் வீரகத்தி சென்.தோமஸ், மெதடிஸ் வெற்றி

(வடமராட்சி)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான 13 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்து, உதைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் தொண்டைமானாறு வீரகத்தி, பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென்தோமஸ், பருத்தித்துறை மெதடிஸ் அணிகள் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகின.

நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இப் போட்டியில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிகள் மோதின. இரு அணிகளும் சிறப்பாக விளையாடிய போதிலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 15:13, 15:10 என 2:0 செற கணக்கில் கைப்பற்றி சம்பியனானது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை சென்தோமஸ் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணிகள் மோதின.

முதலாவது செற்றை 16:15 என உடுப்பிட்டி கைப்பற்றியது. எனினும் எழுச்சி கொண்ட சென் தோமஸ் 15:7,15:9 என அடுத்த இரு சுற்றையும் கைப்பற்றியது நிறைவில் 3:1 என்ற செற் கணக்கில் வென்ற சென் தோமஸ் சம்பியன் பட்டத்தை வென்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவானது.

இதேவேளை மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வட இந்து மகளிரை எதிர்த்தாடிய பருத்தித்துறை மெதடிஸ் 3:1 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (93)





வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளில் இருந்து தேசிய மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள பளுதூக்கும் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வீர வீராங்கனைகளுக்கான இரண்டு நாள் செயல் முறை பயிற்சிப் பட்டறை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. (93)

# தேசிய மட்டத்தில் பிரகாசிக்க கடுமையான பயிற்சி அவசியம்

## சத்தியபாலன் தெரிவிப்பு

வடக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டிகளில் 40 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்ட போதிலும் அகில இலங்கை பாடசாலைகள் மட்டத்தில் பிரகாசிப்பதற்கு சிறப்பான பயிற்சி அவசியம் என வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்தார்.

கடந்த காலங்களைவிட இம்முறை வடக்கு மாகாண மெய்வல்லுநர்களின் ஆற்றல்களில் முன்னேற்றம் காணப்படுகின்ற போதிலும் பிற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அவர்களின் ஆற்றல்கள் இன்னும் அதிகரிக்க வேண்டும் எனக் கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை, பொதுத் தேர்தல் ஆகியவை காரணமாக பாடசாலைகளுக்கு நீண்ட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் விசேட பயிற்சி வழங்கும் திட்டத்தில் சிக்கல் நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டினார். எனினும் பாடசாலை மூன்றாம் தவணைக்காக ஆரம்பமான பின்னர் விசேட பயிற்சிகளை வழங்கத திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் வட மாகாண விளையாட்டு வீர, வீராங்கனைகளின் கூடுதல் பங்களிப்பு இருந்ததால் தான் அதிக பதக்கங்களை எதிர்பார்க்க முடியும். எனவே வீர, வீராங்கனைகளின் முழுமையான பங்களிப்புக்காக விசேட பேருந்து வண்டிகளை ஏற்பாடு செய்து அவர்களை தியகமவுக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் கூறினார்.

இதனை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார, விளை யாட்டுத்துறை அமைச்சு செயலாளர் ஆர். ரவீந்திரன் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வழமையாக யாழ்ப்பாணம், வலிகாமம் போன்ற பிரதேசங்களிலிருந்தே மெய்வல்லுநர்கள் கடந்த காலங்களில் பிரகாசித்து வந்துள்ளனர். ஆனால் இவ் வருடம் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் மெய்வல்லுநர்கள் அதீத திறமையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே அவர்களும் இப் போட்டியில் பங்குபற்றினால் வட மாகாணத்திற்கு கூடுதல் பதக்கங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகளில் 7 தங்கப் பதக்கங்கள் உட்பட 29 பதக்கங்களும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் 2 தங்கங்கள் உட்பட 15 பதக்கங்களும் வடக்கு மாகாணத்திற்கு கிடைத்ததாகக் குறிப்பிட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன், இம்முறை அதனைவிட அதிக பதக்கங்களை வென்றெடுப்பதற்கு எமது மாகாணம் கடுமை யாக முயற்சிக்கும் என்றார்.

# மகளிர் உதைபந்தாட்டம் மாதகல் சென்.ஜோசப் வெற்றி

(பருத்தித்துறை)

தொண்டைமானாறில் இடம் பெற்று வரும் மகளிர் உதைப்பந்தாட்டப் போட்டியின் முதல் ஆட்டத்தில் மாதகல் சென். ஜோசப விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

யாழ்மாவட்ட ரீதியாக மகளிர அணிகளை ஒருங்கிணைத்து முதல் முறையாக தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

இச்சுற்றுப் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மாதகல் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் மோதியது. முற்பாதி ஆட்டத்தில் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம் 2 கோல்களைப் பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் மீண்டும் சென் ஜோசப் விளையாட்டுக் கழகம் 2 கோல்களைப் பெற சென் ஜோசப் விளையாட்டுக்கழகம் 4: 0 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலைமதி விளையாட்



டுக்கழகத்தை வெற்றி கொண்டது. இந்தப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக சென்.ஜோசப் விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்த அன்யசிந்தா தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டிகள் யாவும் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

# சென்பீற்றர்ஸ் கரப்பந்து தாராபுரம் ஜின்னா சம்பியன்



மன்னார் மாவட்டத்தில் உள்ள கரப்பந்தாட்ட அணிகளின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் நோக்குடன் மன்னார் தோட்டவெளி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தோட்டவெளி சென்.பீற்றர்ஸ் கரப்பந்தாட்ட மைதானத்தில் அதன் தலைவர் ஏ.ரி.லுஸ்ரின் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான குறித்த போட்டியில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 கரப்பந்தாட்ட அணிகள் கலந்து கொண்டன.

இறுதிச்சுற்றிற்கு தோட்டவெளி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும், தாராபுரம் ஜின்னா விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

போட்டிகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமானது. முதல் நான்கு போட்டிகளில் இரு அணிகளும் கடுமையாக மோதி தலா இரு வெற்றிகளைப் பெற்று சம நிலைக்கு வந்தன.

ஐந்தாவது சுற்று பலத்த மோதலாக இடம் பெற்றது. இறுதியில் தாராபுரம் ஜின்னா விளையாட்டுக்கழகம் 3-2 என்ற செற் அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தை சுவீக ரித்துக் கொண்டது.

குறித்த போட்டியானது அகில இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் விதி முறைகளுக்கு அமைவாக இடம்பெற்றதோடு பிரதான நடுவராக அகில இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர் பாலித பெரேரா கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

(நேற்றைய தொடர்ச்சி)

ஆயுதம் தாங்கிய புலிகள் மேல் வைத்த அதே கண்மூடித் தனமான நம்பிக்கையை இன்று முறை அரசின் ஏவல் நாய்" என்று வீரப் பேச்சுப் பேசிய தமிழரசுக் கட்சியின் மாவை, காசி, வண்ணை என்ற வெத்துவேட்டுப் பிரசாரப் பீரங்கிகளின் ஞாபகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. அவர்களின் வீராவேசப் பேச்சுகளை நம்பிப் போய், ஏமாந்து தான் ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டதாகத் தானே வரலாறு எழுதுகிறார்கள்?

தயாரா என்ற கேள்விக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட மாகாண சபை அமுலாக்கப்பட்ட போதும், ஒஸ்லோ உடன்படிக்கையின் போதும், வலிய வந்த சீதேவிகளைத் தட்டிக் கழித்து, "விட்டால் குடுமி, சிரைத்தால் மொட்டை" என்று போய் இன்று எதைக் கண்டோம்? இன்றைய சர்வதேச அரசியல் சூழ்நிலையில்,

ஆனால், இந்தத் தேர்தலில் சில நல்ல விடயங்களும் நிகழக் கூடும்.


புலிகளை முதன்மைப்படுத்தி அரசியல் செய்யும் அமைப்புகள் மக்களால் முழுமையாக நிராகரிக்கப்படும் போது, படிப்படியாக மக்கள் ஆயுத மோகத்திலிருந்து விடுபட்டு, ஜனநாயக வழிகளில் உரிமைகளைப் பெறக் கூடிய வழிவகைகள் பற்றிச் சிந்திக்கக் கூடும்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படின், புலிகளின் நினைப்பில் கனவு காணும் புலன் பெயர்ந்தவர்களின் ஆதிக்கமும் குறையலாம்.

விரும்புகிறோமா இல்லையோ, சாத்தியமோ இல்லையோ, ஜனநாயக வழிகள் தான் மிஞ்சியிருக்கிற கோவணத்தைக் காக்கக் கூடிய வழி. இதிலிருந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி இனத்தை சொந்தக் காலில் நிற்க வைப்பதற்கான வழி. இன்றைக்கும் அரசியலுக்கு அள்ளி

# இணக்க அரசியலும் பிணக்க அரசியலும் 3

- பேரறிஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி கட்டுரையிலிருந்து.



எதையுமே சாதிக்க முடியாத, கையாலாகாதவர்கள் மீது வைத்து, அவர்கள் தீர்வைக் கொண்டு வருவார்கள் என்ற எதிர்பார்ப்போடு இருப்பதை என்னவென்பது?

இதில் இன்னமும் நம்ப முடியாமல் உள்ள விடயம், வெறும் வாய்ச்சவடால்களை நம்புவதற்கு இன்னமும் ஆள் இருப்பது தான். குறிப்பாக புலன் பெயர்ந்த தமிழர்களில் பலர், ஈழ அரசியலில் வீராவேசப் பேச்சு பேசுவோர் மீது வைத்திருக்கும் நம்பிக்கை ஆச்சரியம் தரும் ஒன்று. அவர்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள், அவர்கள் வாயால் வெட்டி வீழ்த்தும் அளவுக்கு காரியம் சாதிக்கக் கூடிய அளவுக்கு திறமையுள்ளவர்களா என்ற கேள்விகள் இல்லாமல், சிங்கள அரசுக்கு சவால் விடுகின்றவர்கள் ஹீரோக்களாகப் பார்க்கப்படும் மன நிலையைப் பார்க்கும் போது, கூட்டணிக் கூட்டங்களில், கரகோஷம் பெறுவதற்காக, அங்கே நின்ற பொலிஸ்காரரைப் பார்த்து, "இந்த சிங்கள அடக்கு

இத்தனை அழிவுக்கும் பின்னரும், அதே பழைய சுற்றில் இன்னொரு பயணம்! ஆயுதங்களால் சாதிக்கப் போய், "மௌனிக்கச் செய்ய வேண்டி வந்த" நிலையையும் மறந்து, இன்னமும் இன்னொரு போராட்டம் நடக்கும் என்ற கனவுடன் புலன் பெயர்ந்தவர்கள் பலர் இருப்பதால் தான், இந்த வாய்ச்சவடால் வீரர்களுக்கு மவுசு ஏற்பட்டிருக்கிறது.

சமூகம் தனது தோல்வியிலிருந்து பாடங்களை இன்னமும் கற்றுக் கொள்ளாமல், இன்னமும் இதே போராட்டக் கனவுடன் இருப்பதற்கான காரணம், இந்த வெத்து வேட்டு வீரர்களும் அவர்கள் மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களும் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு, யாரோ பெற்ற பிள்ளைகளை பலிக் களத்திற்கு அனுப்பலாம் என்று நம்பிக்கை கொண்டிருப்பது தான்.

பிணக்க அரசியல் ஆயுதப் போராட்ட மட்டத்தில் இருந்தே தோல்வியடைந்த நிலையில், இடியப்பச் சிக்கலான இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் எவ்வளவு சாத்தியம் என்பதை நினைத்துப் பார்க்காமல், "அடைந்தால் மகா-தேவி, இல்லையேல் மரண தேவி" என்று வீராப்பா வசனம் பேசுபவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பலி கொடுக்கத்

அதிலும் மேற்குலகுடன் நட்பாக உள்ள ஐ.தே.க மீண்டும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறக் கூடிய சந்தர்ப்பத்தில், விட்டுக் கொடுத்தல்களுடன், நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைத் தேடுவது புத்திசாலித்தனமானது. மகிந்தவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்று எவ்வளவு தான் துள்ளிக் குதித்தாலும், சிங்கள அரசியல்வாதிகளாலேயே அதைச் செய்ய முடியவில்லை.

தமிழ்த் தேசியத்தின் இந்த வெற்றுக் கோஷங்கள் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வழங்கிய வாய்ப்புப் போல யாருக்கும் வழங்கவில்லை. எதையுமே சாதிக்காமல், வெற்றுக் கோஷங்களை எழுப்பிக் கொண்டும், வெறும் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கிக் கொண்டும் அரசியல் நடத்தும் வசதியை தமிழ்த் தேசியம் செய்து கொடுத்திருக்கிறது. பொருளாதார ரீதியான அழிவிலிருந்து விடுபட்டு இனம் தனது சொந்தக்காலில் நிற்பதற்கு பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற தேவை தமிழ் அரசியல்வாதிகளுக்கு இல்லை. இதனால் தான் தொகுதிவாரியாக அபிவிருத்திக்குச் செலவிடப்படும் பணத்தை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்புகிறார்கள். குளத்தோடு கோவித்துக் கொண்டு, செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டால், பாதிப்பு தங்களுக்குத் தான் என்பதை உணராத இனம் இது. வெறும் உணர்வுகளுக்குத் தீனி போட்டு வாழ நினைக்கிறது.

இந்தத் தேர்தல்களினாலோ, அவற்றில் தெரிவு செய்யப்படுபவர்களாலோ தமிழ் மக்களுக்கு எந்த விதமான விமோசனமும் கிடைக்கப் போவதில்லை. இந்தத் தேர்தல் முடிந்த பின்னால் இவர்களில் எத்தனை பேர் இந்த மக்களிடம் அடுத்த தேர்தல் வரை திரும்பிப் போவார்கள்? இவர்கள் யாழ்ப்பாணம் போவதை விட, கனடா, சுவிஸ் போகவே முன் நிற்பார்கள்.

இது தான் தமிழ் அரசியலின் தற்போதைய துயர் நிலை.

எறியத் தயாராக இருக்கும் புலன் பெயர்ந்தவர்களின் எத்தனை பேர், தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சிக்கு முதலிடத் தயாராக இருக்கிறார்கள்?

அடுத்தது, தேர்தல்கள் எதைச் செய்யாவிட்டாலும், குறைந்தது தமிழர்களுக்கு பல கட்சி அரசியலை அவர்கள் அறியாமலேயே ஊட்டி விட்டுக் கொண்டிருக்கிறது, நல்லதுதான்.

போராட்ட ஆரம்பத்தின் முதற்படியாக சிங்கள அரசுடன் இணைந்து செயற்படுபவர்கள் துரோகிகளாக்கப்பட்டு, அவர்களுக்கு இயற்கை மரணம் இல்லை என்று பகிரங்கமாகவே அரசியல் மேடைகளில் பேசத் தொடங்கி, அது ஆயுதம் தாங்கியவர்களால் செயற்படுத்தப்பட்ட ஒரு மண்ணில், இன்று அரச ஆதரவுத் தமிழ்க் கட்சிகள் மட்டுமன்றி, அந்த சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளின் சார்பில் உயிர்ப் பயம் இன்றி தமிழர்களே போட்டியிடும் நிலை உருவாகியிருக்கிறது.

இது தான் ஜனநாயகத்தின் வெற்றி. கால் நூற்றாண்டு எந்த விதமான அரசியல் தெரிவும் இன்றி, ஆயுதத்திற்குப் பயந்து வாழ்ந்த இனம், இன்றைக்கு தெரிவு செய்யும் தலைவர்களைப் பிடிக்காவிட்டால், கொடும்பாவி எரிக்க மட்டுமல்ல, அடுத்த தேர்தலில் தூக்கி எறியவும் வழி செய்யப்பட்டிருக்கிறதே, அது தான் தமிழினத்திற்குக் கிடைத்த வெற்றி!

இந்த உரிமைக்காகத் தான் இது வரை காலமும் குரல் எழுப்பியிருக்கிறோம். அயோக்கியர்களோ, கொலைகாரர்களோ, தங்கள் தலைவர்களை மக்கள் ஜனநாயக ரீதியில் தெரிந்தெடுக்க வழி இருக்க வேண்டும். ஆயுதம் தாங்கிகளால் பறிக்கப்பட்ட அந்த உரிமை மீண்டும் மக்களுக்குக் கிடைத்த பெருவெற்றிதான் இன்று கொண்டாடப்பட வேண்டியது.

மற்றும்படி, அனாவசியமாக இந்தக் குருவித் தலைவர்களின் தலையில் பனங்காய்களை வைக்காதீர்கள்!

(தொடரும்)

# யாரோ ஒரு மாமா படுத்திருக்கிறார்...



சென்னையில் இருந்த டி.ஆர். மகாலிங்கம் பங்களாவிற்கு, "சுகுமார (மகன் பெயர்) பவனம்" என்று பெயர். எனக்குத் தெரிந்து, வேறு எந்த நடிகரும் பல கார்கள், அதுவும் விலை உயர்ந்த வெளிநாட்டுக் கார்கள் வைத்திருந்ததில்லை. அவரிடம், 12 கார்கள் இருந்தன. புகழ் பெற்ற நடிகரான இவர் படத் தயாரிப்பில் இறங்கினார். மச்சரேகை, மோகன சுந்தரம் மற்றும் சின்னதுரை ஆகிய படங்களைத் தயாரித்து வெளியிட்டார். தெருப்பாடகன் என்ற படத்தை இவரே இயக்கி தயாரித்தார் படம் பாதியோடு நின்று விட்டது.

சரிவுப் படலமும் துவங்கியது. பொருளாதார வீழ்ச்சி, கடனாளியாக்கியது. "போதம், தனம், கல்வி ஒன்றி வரும் காலத்தே மாதர் மேல் வைப்பார் மனம்..." என்பது எத்தனை அனுபவ பூர்வமான உண்மை!

மகாலிங்கம் வாழ்வில் தடுமாற்றம், மனமாற்றம் வந்ததை அவரே கூறக் கேட்டிருக்கிறேன்...

"மாளிகை போன்ற சுகுமார பவனமும், மனைவி மக்களும் அங்கே இருந்தனர்; நான் மட்டும் அடையாறில் வேறொருத்தி இல்லத்தில், பல காலம் கிடந்தேன். கடன்காரர்களுக்கு மறைந்து, பிள்ளைகள் முகம் மறக்கும் அளவுக்கு காலம் ஓடியது. இல்லாதவனை எவர் தான் மதிப்பர்! நானும் கேவலமாக நடத்தப்பட்டேன்.

அன்று இரவு, 2:00 மணி அளவில், "இனி இவள் முகத்தில் விழிப்பதே பாவம்..." என அடையாறிலிருந்து கால்நடையாக மயிலாப்பூருக்கு நடந்தே வந்தேன். என் சொந்த வீட்டில் கள்ளனைப் போல் மெதுவாக நடந்து போர்டிகோ அருகில் வந்தேன். ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. கதவைத் தட்ட துணிவில்லாமல், போர்டிகோ திண்ணையில் கையை தலைக்கு வைத்து சுருண்டு படுத்தேன். விடியற்காலை மகள் வந்து பார்த்திருக்கிறாள். அவளுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. "அம்மா... இங்கே, யாரோ ஒரு மாமா படுத்திருக்கிறார்..." என்று அவள் கூறுவது என் காதில் விழுந்தது..." என்றார், கண்ணீருடன்!

('திரையுலக சக்கரவர்த்திகள்' நூலில் எஸ்.எம்.உமர்)

இத்தாலிக்காரனான மார்க்கோ போலோ தான், ஒரு சுற்றுலாப் பயணியாக ஆசியாக் கண்டம் முழுவதையும் முதன் முதலாக பார்த்தவன். ஒவ்வொரு நாட்டிலும் தங்கி, அந்நாட்டு மக்கள், அவர்கள் வியாபாரத் தன்மைகள் என, எல்லாவற்றையும் நூலாக எழுதி வைத்திருக்கிறான்.

தமிழ்நாட்டை "மாபார்" என்றும் சிலோனை, அதாவது இலங்கையை "சைலான்" என்றும், நூலில் குறிப்பிட்டிருக்கிறான். தமிழ்நாடு, 13ஆம் நூற்றாண்டில் எப்படி இருந்தது என்பதை மிக விரிவாகவே குறிப்பிட்டிருக்கிறான். மிகவும் வேடிக்கையாவும் சில நம்ப முடியாமலும் உள்ள

## "அரசியல் வியாபாரம் செய்யும் த.தே.கூ தலைவர்கள்" - விக்கி



த.தே.கூ தலைவர்கள் வெளிநாடுகளில் குடும்பங்களை வைத்துக் கொண்டு அரசியல் வியா-பாரம் செய்கின்றனர் என வடமாகாண-சபை முதலமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களுக்கு மிடையே கடுமையான முரண்பாடுகள் விரிந்து வருவது இரகசியமானதல்ல. ஆகஸ்ட் முதலாம் திகதி "தமிழ்கிங்டம்" என்ற இணைய ஊடகத்துக்கு வழங்கிய ஒளிப்பதிவு செய்யப்பட்ட நேர்காணலில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மீது மிகக் கடுமையான வார்த்தைகளைத் தொடுத்துள்ளார்.

"நான் யாரையும் தனிப்பட்ட முறையில் தாக் கவில்லை" என்று ஆரம்பித்த முதலமைச்சர் "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பல தலைவர்களுடைய குடும்பங்கள் இந்தியாவில் இருக்கின்றன. அப்ப, இவர்கள் வந்து ஒரு பிசினஸ்ஸை நடத்துகிற மாதிரிதான் நடத்திக்கொண்டு.. அந்தந்த நேரத்திற்கு வந்து வாக்குகளை எடுப்பதும் போவதும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வெளிநாடு களில் குடும்பங்களை வைத்துள்ள வதிவிடங்க ளைக் கொண்டுள்ள தலைவர்களான இரா. சம்பந்தன் (த.தே.கூ தலைவர், இந்தியா), மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சித் தலைவர், இந்தியா), செல்வம் அடைக்கலநாதன் (தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர், இந்தியா), என். சிறிகாந்தா (தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ் மாவட்ட வேட்பாளர், அவுஸ்ரேலியா), வினோநோ கராதலிங்கம் (தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட வேட்பாளர், பிரித்தானியா), சுரேஸ் பிரேமச்சந்திரன் (ஈபிஆர்எல்எப் சுரேஸ் அணியின் தலைவர், கனடா) ஆகியோர் முதலமைச்சரின் சொல்லம்புகளுக்கு இலக்காகி உள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிவித்த முதலமைச்சர் "இது சரிவராது" என்றும் திட்டவட்டமாக மேலுள்ள தலைவர்களுக்கு சுட்டிக்காட்டியும் உள்ளார்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபட மாட்டேன் என்று தெரிவித்து இருப்பது தொடர்பாக தேர்தல் நிறைவடைந்த பின்னர் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்த பின்னரே முதலமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டும் வெளிவந்து உள்ளது. (தமிழ்கிங்டம் இணையத்தில் முதலமைச்சர் உரையாடிய காணொளிப் பதிவைக் காணலாம்)

- தேசம் நெற்

## இப்படியுமா நடக்குமா?... ஆனாலும் உண்மை



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் தம் தேர்தல் பிரச்சாரத்தை யாழ் இந்துமகளிர் கல்லூரிக்குள் குறித்த கல்லூரியின் அதிபரின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்துள்ளனர். கல்லூரிக்குள் நுழைந்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் அங்கு நின்ற மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுடன் கட்டாயமான முறையில் பிரசாரங்களில் ஈடுபட முயன்றதால் பாடசாலை வட்டாரங்கள் பெரும் அதிருப்தியுடன் விசனமடைந்ததாகத் தெரியவருகின்றது.



# வலையில் கிடைத்தவை...

தேர்தல் பிரச்சாரங்களைப் பாடசாலைக்குள் நடாத்துவதற்கு அதிபர் எவ்வாறு இடமளிக்கலாம் என ஆசிரியர்கள் தரப்பில் வினா எழுப்பப்படுகிறது. இதே வேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் அனுசர ணையுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள பாடசா லைகளுக்குள் சென்று தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக் கின்றன. இவர்களை உள்ளே அனுமதிக்க மறுக்கும் அதிபர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது. இது தொடர்பாக யாழ் மாவட்ட தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

- சூத்திரம்

## கோத்தாவின் காலில் விழுந்த குதிரைக் கஜேந்திரன்



சில நாட்களாக கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செல்வராஜா கஜேந்திரன் அவர்களின் தம்பியான விரிவுரையாளர் ரவீந்திரன் அவர்கள் முன்னைய ஆட்சிக் காலத்தில் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டது தொடர்பாக, கஜேந்திரன் கோத்தாவின் காலில் விழுந்ததனால் விடுதலை செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டை மறுக்கும் முகமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செம்புகள் சிலர் விக்கி லீக்சில் உள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதரக தொடர்பாடல்கள் தொடர்பான இணைப்பை... பகிர்ந்து வருகிறார்கள்...

அவர்களிடம் நாம் கேட்கும் கேள்வி இதுதான்... சரி அது உண்மையாகவே இருக்கட்டும்... அப்படி என்றால் 2004-2010 வரை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தமிழ்த் தேசியக் கொள்கை மாறாது இருந்ததாகச் சொல்லும் செல்வராஜா கஜேந்திரன், அப்போது வெளி விவகாரக் குழுவிற்கு பொறுப்பாக இருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடு வெளி விவகார குழுவில் இருந்ததாகவும் சொல்கின்றார்... இவர் தனது தம்பி கடத்தப் பட்டமைக்கு மட்டும் அமெரிக்கத் தூதரக அழுத்தத்தைப் பயன்படுத்தி அவரது தம்பியை மட்டும் வெளியில் கொண்டு வரமுடியும் என்றால் அதே காலப் பகுதியில் யாழ் குடாநாட்டில் 2006 பாதை பூட்டின காலத்தில் இருந்து 2009 யுத்த முடிவு வரை காணாமற் போன பல இளைஞர்கள் யுவதிகள் பலரையும் அமெரிக்கத் தூதரகத் தலையீட்டைப் பயன்படுத்தி ஏன் விடுவிக்க வில்லை... இவரது தம்பியை மட்டும் த்தானா இராணுவத்தினர் கடத்தினார்கள்? இதுடா நீங்கள் கூறும் மாற்றம்....??? அப்ப நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து செய்ய முடியாததையா இப்ப மாற்றம் எண்ட பெயரில செய்யப் போறீங்க....???

- ஜவ்னா ஜெற்

## மாணவர் கல்வியைச் சீரழிக்கும் சிறீதரன்



தனிநபர்களின் அரசி யல் நலன்களுக்காக மாணவர்களின் கல்வி கற்கும் உரிமை பறிக்கப்படுகிறதா? பளைப் பிரதேசத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி பாடசாலை மாணவர்களைத் தனக்கான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி யுள்ளார் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன். கடந்த 30.07.2015 வியாழக்கிழமை அன்று, பளை மத்திய கல்லூரி மாணவர்கள் பாடசாலை நேரத்தில் மு.ப 11.00 மணியளவில் பகிரங்கமாகவே பாடசாலைச் சீருடையுடன் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதைக்கண்ட பொதுமக்கள் மாணவர்களைக் கண்டித்தனர். மாணவர்களின் பெற்றோர்களும் "பள்ளிக்கூடம் போறன் எண்டு சொல்லிப்போட்டு நோட்டீஸ் குடுத்துக்கொண்டு திரியுறீயோ... பொறு அதிபரிட்ட வந்து கதைக்கிறன்." என்று மனம் நொந்து கடிந்துள்ளனர்.

- சாகரம்

## சூப்பர் சிங்கர் பாடகர்களை வைத்து வாக்கு வேட்டை!



யாழ்ப்பாணத்தில் நடந்த ஐக்கிய தேசிய கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் மூலம் ஈழத்தமிழர்கள் மத்தியில் பிரபலமான பாடகர்கள் சிலரும் பங்கேற்றிருந்தமை, புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குக் கேட்ட சுப்பர் சிங்கர் பாடகர்கள் மீது கடும் சினத்தில் இருக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களிடமும், ஈழத்தமிழர் பணத்தின் மீதான ஆர்வலர்களிடமும் ஒரு கேள்வி. வாக்குக் கேட்டு வந்தவர்கள் மீதே கடும் சினத்தில் இருக்கும் நீங்கள் சிங்களக் கட்சிக்கே வாக்குப் போட்ட தமிழ்த் தேசியங்களைத் துரோகிகள் என்று சொல்லாதது ஏன்?

2010 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் 8.5 வீத வாக்குகள் போடப்பட்டன. இனவாத ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ்த் தேசியர்கள் அளித்த வாக்குகள் மொத்தம் 12624. அதே இனவாதக் கட்சிக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி காரைதீவு மேட்டுக்குடியினர் அள்ளிக் கொடுத்த வாக்குகள் 3438.

அதுமட்டுமல்ல, காசு வாங்கிக்கொண்டு பொன்சேகாவுக்கும் சிறிசேனவுக்கும் தமிழ்த் தேசிய வாக்குகளை அள்ளி வழங்கிய கட்சி துரோகியாகாதா?

- சூத்திரம்

## மீன்கள் வாயைக் கட்டும் மந்திரம்!



விஷயங்கள் பல அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் முத்துக் குளித்தலைப் பற்றி விவரித்திருப்பவை சுவாரசியமானவை. கிடைக்கிற முத்தில், பத்தில் ஒரு பங்கு, அரசரைச் சேரும்... அதில் ஆச்சரியமில்லை. ஆனால், கிடைக்கிற முத்தில், 20இல் ஒரு பங்கு மந்திரவாதிகளுக்குத் தந்துவிட வேண்டுமாம். முத்தெடுக்க மூழ்குகிற வர்களை மீன்கள் கடித்து விடாமல் இருப்பதற்காக, மீன்களினுடைய வாயை மந்திரம் போட்டுக் கட்டி விடுவார்களாம் அந்த மந்திரவாதிகள், அதற்காகத்தான் அந்தச் சன்மானம்.

அதே மாதிரி, இரவு நேரத்தில், திருட்டுத்தனமாக யாராவது கடலில் மூழ்கி முத்தெடுத்து விடாமலிருப்பதற்காக, இரவில் மீன்கள் வாயை மந்திரக் கட்டிலிருந்து எடுத்து விடுவாராம். திருட வருவோரை அவை கடிப்பதற்காக.

## இவர்தான் புது ஸ்பைடர்மேன்!



ஹொலிவுட்டில் ஜேம்ஸ்பொண்ட் படங்களைப் போலவே, ஸ்பைடர்மேன் படங்களுக்கும் கிராக்கி உண்டு. குறிப்பாக, ஸ்பைடர்மேன் படங்களுக்கு ஏராளமான குழந்தை இரசிகர்கள் உண்டு.

இதுவரை, டோபி மகியூர், அன்ட்ரூ கார்பீல்ட் போன்றோர் ஸ்பைடர்மேனாக நடித்து, இரசிகர்களைக் கவர்ந்துள்ளனர். அடுத்த ஸ்பைடர்மேன் படத்தை, பிரபல ஹொலிவுட் இயக்குனர் ஜோன் வாட்சன் இயக்குகிறார். இதில், ஸ்பைடர்மேனாக நடிப்பதற்கு, ரொம் ஹொலண்ட் என்ற, 19 வயது இளைஞர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். புது ஸ்பைடர்மேனுக்கு, இரசிகர்களின் வரவேற்பு எப்படி இருக்கும் என்பது, 2017இல் படம் வெளியாகும் போது தான் தெரியும்.

# முரசின் இன்றைய பலன்

(05.08.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் ஆடி மாதம் 20 ஆம் திகதி.
மரண யோகம். சஷ்டி திதி. கரி நாள்.
ரேவதி நட்சத்திரம் பின்னிரவு 02.25 வரை. பின் அச்சுவினி.
இராகு காலம் 12.04 - 01.34 வரை. சுபநேரம் 04.34 - 06.04 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — நெருக்கடிகளினால் பணியிடத்தில் சில பாதிப்புக்களை எதிர நோக்கல்.

**ரிஷபம்** — தொழில் மாற்றம் ஏற்பட சூழல் சாதகமான நிலையில் தக்க வைத்தல்.

**மிதுனம்** — பிறரை அனுசரிப்பதுடன் விழிப் பாகவும் இருங்கள்.

**கடகம்** — கொடுக்கல் வாங்கல் மனதிற்கு ஆறுதலைத் தேடித்தரும்.

**சிம்மம்** — நன்கு திட்டமிட்டுச் செயலாற்ற முயன்றதால் அதிர்ஷ்டம் அரவணைத்தல்.

**மீனம்** — நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராகச் செல்ல அழைப்பு விடுக்கப்படல்.

**கன்னி** — தெய்வவழிபாடு, பரிகாரம் செய்வதின் மூலம் நாடி வரும் துயர் விலகிவிடும்.

**கும்பம்** — பழைய கடனைக் கட்ட புதிதாக கடன்படும் நிலைக்குச் செல்லுதல்.

**மகரம்** — கால்நடைகள், பயிர்பச்சைகள் கோழிவளர்ப்புக்கள் நட்ட நிலையில் தக்க வைத்தல்.

**தனுசு** — காற்றுள்ள போதே தூற்றிக் கொளவது போல் கிடைத்த அதிர்ஷ்டத்தைக் கைவிடவேண்டாம்.

**விருச்சிகம்** — எதிர்பாராத செலவினங்கள், தேகநலம் குன்றுதலையும் எதிர்பாருங்கள்.

**துலாம்** — அனுபவங்களை ஆசானாகக் கொண்டதனால் வெற்றிவாகை சூடுதல்.

# வடமராட்சியில் பிரியாவிடை நிகழ்வு




(யாழ்ப்பாணம்)

பதவிக்கால நிறைவை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களின் பிரியாவிடை நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அப்பகுதி பிரதேச செயலர் க.கனகதுரை பிரதேச சபை தவிசாளருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், சபை உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருபபதையும் காணலாம். (அ,18)


**நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015**

**(தேர்தல் மாவட்டம் – வன்னி)**



**விஜயரட்ணம் சுரேந்தர்**

**(சுரேன்)**



X 6

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**


# 12 வயது சகோதரியை வல்லுறவுக்குட்படுத்திய 16 வயது சகோதரனுக்கு 5 வருட கடூழிய சிறை

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சொந்த சகோதரியாகிய 12 வயதுடைய சிறுமியை 16 வயதுடைய அவரது கூடப்பிறந்த சகோதரன் 8 வருடங்களுக்கு முன்னர் வல்லுறவுக்கு உட்படுத்திய வழக்கில் சகோதரனுக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இந்த வழக்கு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில் 2007 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனையடுத்து, 12 வயது நிரம்பிய கூடப்பிறந்த சகோதரியை பாலியல் வன்புணர்வு புரிந்ததாக அவருடைய சொந்த சகோதரனாகிய 16 வயதுடைய சிறுவனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றம் சுமத்தப்பட்டு, யாழ்.மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட பெண் (இப்போது அவருக்கு 20 வயது. சகோதரனுக்கு வயது 24) நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

அப்போது, எதிரிக் கூண்டில் நின்றவரைக் காட்டி, அவர் தனது மூத்த சகோதரன் என்றும், அவர் தன்னை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகவும், அதனைக் கண்ட தனது தந்தையார், தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியதற்காக, தனது சகோதரனை அடித்ததாகவும் தனது சாட்சியத்தில் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து எதிரி, தான் பாலியல் வன்புணர்வு குற்றம் செய்ததை நீதிமன்றில் ஒப்புக் கொண்டார்.

அப்போது எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, குற்றச் செயல் இடம்பெற்றபோது, எதிரிக்கு 16 வயது. இந்த வழக்கின் விசாரணைக் காலத்தில் அவர் 3 வருடங்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அத்துடன், பதினாறு வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பதின்ம பராயமுடைய ஆண் மகன் ஒருவர் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டால், அவருக்கு தண்டனை குறைப்பு உள்ளது என்று சுட்டிக்காட்டி, எதிரிக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும் என விண்ணப்பம் செய்தார்.

ஆனால் அரச சட்டத்தரணி, திருமதி நளினி சுபாகரன் சொந்த சகோதரி மீது பாலியல் குற்றம் புரிந்த எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என நீதிபதியிடம் கோரினார்.

அத்துடன். பாதிக்கப்பட்ட பெண் சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையிலேயே, தனக்கு நேர்ந்த குற்றச் செயல் குறித்து, சாட்சியமளித்துள்ளார். கூடப்பிறந்த சகோதரன் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகவும் அவர் தெளிவாக சாட்சியமளித்துள்ளார். இதனையடுத்தே, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இந்தக் குற்றத்திற்கு பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டம் பரிந்துரைக்கின்றது. குறைநதபட்ச தண்டனை பரிந்துரைக்கப்படவில்லை. எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்தார்.

இதனையடுத்து இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி



இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது,

இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவரும், குற்றம் சுமத்தப்பட்டவரும் கூடப் பிறந்த சகோதரர்கள். எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்ணும் தனது சகோதரன் தன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்று நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

விசாரணை நடைபெற்ற போது, எதிரி தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 ஆண்டுகள் விளக்கமறியல் காலமும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. எதிரி 16 வயதிலேயே குற்றம் புரிந்தார் என்பதும் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. இருப்பினும் கூடப் பிறந்த சகோதரியை காட்டுமிராண்டித்தனமாக வன்புணர்வு செய்ததைக் குற்றச் செயலாகமன்று கருதுகின்றது. குற்றம் புரிந்தபோது எதிரி 16 வயது சிறுவன் என்பதால் அவருக்கு 5 ஆண்டுகள் கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது என்றார் நீதிபதி இளஞ்செழியன்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெணணுக்கு, எதிரி 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு செலுத்த வேண்டும் என்றும், தண்டப்பணமாக, அவர் ஐயாயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.(25)

# தென்னிந்தியக் கலைஞர்களுடன் திருமறைக் கலாமன்றின் ஆவணித் திங்கள் பொற்தூறல்

(யாழ்ப்பாணம்)

பொன்விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடாத்தி வருகின்ற "பொற்தூறல்" நிகழ்ச்சித்தொடரின் இம் மாதத்துக்கான நிகழ்வு "ஆவணித்திங்கள் பொற்தூறல்" என்னும் பெயரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09.08.2015) மாலை 5.00 மணிக்கு, இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைநதுள்ள திருமறைக் கலாமன்ற கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்ச்சிகளாக யாழ்.சக்ஸபோன் சகோதரர்கள யசோதரன் நவஷரூபன் மற்றும் யசோதரன் காண்டீபன் ஆகியோர் வழங்கும் சக்ஸபோன் இசைச் சங்கமும், இந்தியாவில் இருந்து வருகை தரும் சென்னை - கலைக்கூடம் நாட்டியப்பள்ளியின் இயக்குநரும், நாட்டிய கலாவித்தகி ஸ்ரீமதி பார்வதி ரவி கண்டசாலாவின் மாணவியு மான "நிருத்திய சிரோன் மணி" நாட்டிய கலா விபஞ்சி - முருகசங்கரி லியோ அவரது குழுவினரும் வழங்கும் நடனநிகழ்வுகளும் இடம்பெறும். இந் நிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

# சிறுமியுடன் வாழ்ந்த இளைஞனை விளக்க மறியலில் வைக்க உத்தரவு

## சிறுமியின் தந்தை தீக்குளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பிரதேசத்தில் 16 வயது சிறுமியுடன் சேர்ந்து வாழ்ந்த அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


கொடிகாமம் கச்சாய் வீதியைச சேர்ந்த 21 வயதுடைய இளைஞனும், 16 வயதுடைய சிறுமியும் காணாமற் போனதையடுத்து சிறுமியின் பெற்றோர்களால் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த இளைஞனும் சிறுமியும் சேர்ந்து வாழ்வதைக் கணடறிந்து அவர்களைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

இதனால் சிறுமியின் தந்தை தீக்குளித்துள்ள நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த இருவரையும் பொலிஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, குறித்த இளைஞனை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட பதில் நீதிவான் செ.கணபதிப்பிளை, சிறுமியை கைதடியிலுள்ள இரட்சணிய சேனை இல்லத்தில் அனுமதிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இருவரையும் சட்ட வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளார்.



காரைநகர் கருங்காலி ஐயப்ப சுவாமி ஆலய முன்றலில் அண்மையில் சிவபதமடைந்த வைத்தீஸ்வரக் குருக்கள் ஞாபகார்த்தமாக ஆலய நிர்வாக மணி மண்டபம் அமைக்கும் பணியை மேற்கொண்டு வருவதைக் காணலாம். (50)

# முல்லை. கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதியின்றி சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு எல்லைப்புற கிராமங்களில் சீரான போக்குவரத்து வசதி காணப்படாமையால் அடிப்படை வசதிகளையும் அரச கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும் பல சிரமங்களை நீண்டகாலமாக எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு எல்லைப் புற கிராமங்களாக செல்வபுரம், இந்துபுரம், முறிகண்டி, வசந்தநகர் ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி நகரை அண்மித்து 7 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படும் குறித்த கிராமங்களுக்கான பிரதேச செயலகம் சுமார் 45 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

அத்துடன் 25 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள மாங்குளம் பொலிஸ் நிலைய சேவையையே பெறவேண்டியுள்ளது.

இந்நிலையில் அடிப்படைத் தேவைகளையும் சேவைகளையும் பெறுவதற்கு இரண்டு பேருந்துகளில் பயணிக்கவேண்டியுள்ளதால் சீரான போக்குவரத்து வசதியைப் பெறமுடியாதுள்ளதாகவும் குறித்த கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# விமானப் படைத்தள வயல்வெளிக்கு இனந் தெரியாதோரால் தீ வைப்பு



வவுனியா, மாமடு பிரதேசத்தில் அமைந்துள்ள விமானப் படைத்தளத்துக்கு முன்னால் உள்ள வயல்வெளி, கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இனந்தெரியாதோர் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது.


இந்த தீ, விமானப் படைத் தளத்தை நோக்கி பரவி வந்ததால், அதனை கட்டுப்படுத்த விமானப் படையினர் பாரிய முயற்சிகளை மேற்கொண்டதாக படைத்தள அதிகாரிகள் கூறினர்.

இந்த தீ காரணமாக, வயல் வெளிக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியும் தீர்க்கிரையாகியுள்ளது.

விமானப்படையினரின் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் விமானப் படைத்தளம் பாதுகாக்கப்படடதாக கூறிய மடுக்கந்த பொலிஸார், இந்த தீ வைப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறினர்.

# ஆயுர் வேதம்

## எங்கு தொட்டாலும் ஏப்பம்!




வாயுத் தொல்லை இருந்தால், உடலின் அனைத்து உறுப்புகளிலும் வாயு தேங்கிக் கொள்கிறது. தலையில் வாயு தேங்கிக் கொள்ளும்போது தலைவலி ஏற்படுகிறது. உடலில் எங்கு தொட்டு அழுத்தினாலும் ஏப்பம்.

இதுபோன்ற உடல்நிலைகளில் வாயுவினுடைய சீற்றத்தை ஏற்படுத்தக் கூடிய உணவு மற்றும் செயல்பாடுகளை நீக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

அறுசுவைகளில் காரம், கசப்பு மற்றும் துவர்ப்புச்சுவை வாயுவின் சீற்றத்தை அதிகப்படுத்தக் கூடியவை. இவற்றிற்கு நேரெதிரான இனிப்பு, புளிப்பு மற்றும் உப்புச்சுவை சிறிது அதிகமாக உணவில் சேர்ப்பதால் வாயுவின் சீற்றத்தை குடல் பகுதியிலிருந்தும் மற்றும் உடல் உட்புற தாதுப் பகுதிகளிலிருந்தும் வெளியேற்ற முடியும்.

குளிர்காற்று, குளிர்ந்த நீர் பருகுவது, எந்நேரமும் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு வேலை செய்தல், குளிர்ந்த நீரில் தலைக்குக் குளித்தல், அதிக சைக்கிள் சவாரி செய்தல், ஓய்வின்றி அதிகம் உழைத்தல் போன்ற செயல்பாடுகளாலும் வாயுவின் சீற்றம் நரம்புகளில் தாக்கக் கூடும்.

உணவில் அதிகம் பருப்பு சேர்த்தல், ஆறிப் போன நிலையில் பருப்பு சேர்ந்த பொருட்களைச் சாப்பிடுதல் மூலமாகவும் வாயுவின் சீற்றமானது குடலிலிருந்து அதிவேகமாக தாதுக்களில் பரவுவதால் அதனுடைய தாக்கமானது நரம்பு மண்டலங்களிலும் ஏற்றம் பெறும். அதனால் உடலை அழுத்தும்பொழுது வாய் வழியாக ஏப்பம் விடுதல், தலைவலி போன்றவை ஏற்படுகின்றன.

வாயுவினுடைய வறட்சி, குளிர்ச்சி போன்ற குணங்களைச் சமாளிக்கக் கூடிய நெய்ப்பு மற்றும் சூடான குணங்களைக் கொண்ட மருந்து, உணவு மற்றும் செயல்பாடுகளால் நரம்புகளில் குடி கொண்டுள்ள வாயுவை வெளியேற்ற வேண்டும்.

மூலிகைத் தைலமாகிய கார்பாஸாச்த்யாதி எனும் தைலத்தை வெதுவெதுப்பாக தலையில் சுமார் முக்கால் மணிநேரம் வரை ஊறச் செய்து சிறிது சூடான தண்ணீரில் காலை வேளையில் குளிப்பதும், அன்றைய தினம் மிளகு, சீரகம், பூண்டு ஆகியவற்றைப் போட்டு தயாரித்த சூடான ரசம், புழுங்கலரிசிச் சோற்றுடன் கலந்து சிறிது கறிவேப்பிலைத் துவையலுடன் காலையில் சாப்பிடுவது நலம். இதனால் குடலிலிருந்து வாயு நன்கு வெளியேறும்.

வாரம் இருமுறையேனும் தலையில் எண்ணெய்யை ஊற வைத்துக் குளிப்பது நல்லது. தான்வந்தரம் எனும் தைலத்தைச் சூடாக்கி உடலெங்கும் இந்நாட்களில் தேய்த்துக் குளிப்பதும் நலமே.

குடல், தாது மற்றும் நரம்புப் பகுதிகளில் பதுங்கியுள்ள வாயுவை வெளியேற்றக் கூடிய தான்வந்தரம் குளிகை, வாயுகுளிகை, தசமூலாரிஷ்டம், பலா அரிஷ்டம், தன்வந்தராரிஷ்டம் போன்றவை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடவேண்டிய சிறப்பான மருந்துகளேயாகும்.

**செயற்பாடுகளில் செய்ய வேண்டிய மாற்றங்கள்:** குளிரூட்டப்பட்ட அறையில் படுக்கக் கூடாது. படுக்கைவிரிப்பு, தலையணை, போர்வை போன்றவற்றை பகல் வெயிலில் போடப்பட்டு நன்கு சூடேற்றப்பட்ட நிலையில் இரவில் பயன்படுத்துவது நலம்.

குளிர்ந்த நீருக்கு மாற்றாக சுக்கை சீவல் போல போட்டுக் காய்ச்சிய ஆறிய வெந்நீரைக் குடிப்பதும், கொட்டாவி, தும்மல் போன்ற இயற்கை உந்துதல்களை உதாசீனப்படுத்தாது அவற்றை அடக்காமல் மதிப்பளித்து அவை நன்கு நிறைவேறும்படி செய்துகொள்ளுதல், குளிர்ந்த தரையில் அல்லது குளிர்ச்சியான நீர் ஊற்றப்பட்ட தரையில் நிற்காமல், நிற்க வேண்டிய நிர்ப்பந்தமிருந்தால் காலணிகளை அணிந்துகொண்டு வேலை செய்வதும் வாயுவின் சீற்றத்தைத் தடுக்கக்கூடிய சில நல்ல உபாயங்கள்.

ஆயுர்வேதத்தின் ஒரு சிறந்த சிகிச்சை முறையான வஸ்தி எனும் எனிமா சிகிச்சைமுறை தற்சமயம் அதிகம் செய்யப்படுவதில்லை. மூலிகைத் தைலங்களால் இரண்டு நாட்கள் செய்யப்பட்டு மூன்றாவது நாள் மூலிகைகளால் காய்ச்சப்பட்ட கஷாயத்தை ஆசனவாய்வழியாகச் செலுத்தி குடல் உட்புறத்திலிருந்து வாயுவை நன்றாக வெளியேற்றுதல், அதன் பிறகு சிற்றாமுட்டி வேர் கஷாயத்தை பாலுடன் கலந்து காரரிசியுடன் வேக வைத்து மூட்டை கட்டி உடலெங்கும் வெதுவெதுப்பாக தடவிவிடுதல்,

தலையில் எண்ணெய்யை நிரப்பி வைக்கக் கூடிய சிரோவஸ்தி எனும் சிகிச்சை, காதுகளில் ஐந்தெட்டு சொட்டுகள் விடப்படும் வசாலசுனாதி தைலம், வாய் கொப்பளிக்க அரிமேதஸ் தைலம், கண்களில் நெய்கட்டும் தர்ப்பணம் எனும சிகிச்சைமுறை ஆகியவற்றால் நரம்புகளிலும் தசைப்பகுதிகளிலும் பரவியிருக்கக் கூடிய வாயுவின் சீற்றத்தை அடக்கக் கூடிய சிறந்த சிகிச்சை முறைகள் அவருக்குத் தேவைப்படக்கூடும்.

# தேசிய அரசாங்கதிட்டம் கைவிடப்படமாட்டாது

## லக்ஸ்மன் கிரியல்ல மீண்டும் வாக்குறுதி

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைக கும் திட்டம் கைவிடப்படமாட் டாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஐக்கிய தேசியக் கட் சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் அமைச்சருமான லக்ஸ மன் கிரியல்ல இதனைத் தெரி வித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந் தும் உரையாற்றிய அவர்,

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.



ஒட்டு மொத்த நாடாளுமன் றமே அரசாங்கமாக இயங்கக் கூடிய ஓர் பின்னணி உருவாக் கப்படும். முழு நாடாளுமன் றமே நாட்டின் பிரச்சினைக ளுக்கு தீர்வு வழங்கக் கூடிய நிலைமை உருவாக்கப்படும்.

சிறுபான்மை மக்கள் துன் புறுத்தப்பட்டு, தனித் தனியாக பிளவடைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்தலில் தோல்வியைத் தழு வுவது உறுதியாகியுள்ள கார ணத்தினால் எதிர்க்கட்சிகள் போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதன் ஓர் கட் டமாகவே அண்மையில் புளு மெண்டலில் தாக்குதல் நடத்தப் பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு இளைஞர்கள் வாக்களிக்க வேண்டும்

## கோருகின்றார் சிங்கள இசையமைப்பாளர்

(கொழும்பு)

கடந்த கால வரலாற்றை நன்கு ஆராய்ந்து இம்முறை இளை ஞர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக் களிக்க வேண்டுமென, பிரபல சிங்கள இசையமைப்பாளர் ரோஹண வீரசிங்க தெரிவித் துள்ளார்.

கொழும்பு தேசிய நூல கத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரி வித்த அவர் இவ்வாறு கூறி னார்.

அறியாமை காரணமாகவே கடந்த காலத்தில் இளைஞர்கள் மகிந்தவை தோற்கடித்தனர் கடந்த கால தவறினை மீண்டும்



விடக் கூடாது.

நாட்டில் தற்போதைய சூழ் நிலைகளை பார்க்கும்போது நீண்டகாலமாக நிலவிய யுத் தத்தை நிறைவுக்கு கொண்டு வந்து ஏற்படுத்தப்பட்ட சமாதா னத்தை இல்லாமல் செய்யும் வாய்ப்புகள் உள்ளது அதற்கு இடமளிக்கக் கூடாதெனவும் அவர் தெரிவித்தார்.

# பணவீக்கம் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் பண வீக்கம் கடந்த மாத இறுதியில் வீழ்ச்சி யடைந்துள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு நுகர்வோர் சுட்டெண்ணிலும் முன் னேற்றம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்தரசிங்க தெரிவித்துள்ளார். கடந்த சில மாதங்களாக உணவு பொருட்களற்ற சில பொருட்களின் விலைகள் குறை வடைந்தமையே இதற்கான காரணம் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

# வேகமாக அபிவிருத்தியடைந்த "கொழும்பு" இன்று சிக்காக்கோ போல் மாறியுள்ளது

## விமல்வீரவன்ச கவலை

(கொழும்பு)

உலகில் அதி வேகமாக அபிவிருத்தி அடைந்து வந்த கொழும்பு நகரம், இன்று சிக் காக்கோ போல மாறியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் விமல் வீரவன்ச தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தி னம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 2009ஆம் ஆண்டு மே 19இல் இந்த நாட்டை வன் முறையற்ற நாடாக மாற்றினோம். பாதாள உலகக் குழுத் தலை வர்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கையின் போது 8 முக் கிய புள்ளிகள் நாட்டை விட்டு தப்பியோடினர். அவர்கள் இன்று மீண்டும் நாட்டிற்கு வந்து, பிரதான அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற னர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அண்மையில் கொழும்பில் பய ணப்பொதிக்குள் சடலம் கண் டெடுக்கப்பட்டது. இந்த அரசாங் கத்தில் புறக்கோட்டை பிண வறையாக மாறியுள்ளது.

வரலாற்றில் பாதாள உலக் குழுவினர் நாட்டின் தேர்தலை



நிர்ணயித்ததாக சரித்திரம் இல்லை. ஒருகாலத்தில் அதற்கான சூழ் நிலை காணப்பட்டது. நாம் அதனை இல்லாமல் செய்தோம். ஆனால் பாதாள உலகக் குழு வினருக்கு உயிர்கொடுத்து நாட்டை மீண்டும் பாரதூரமான நிலைக்கு இட்டுச்செல்ல முயற் சிகள் நடக்கின்றது.

இதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு நாம் விரைவில் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கவுள் ளோம். நாட்டில் நீதியை நிலை நாட்ட முடியாதுள்ளது என் றார்."

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மகிந்தவின் தலையீட்டால் பாரிய பிளவு

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலையீடு கார் ணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசி யக் கட்சி தெரிவித்துள்ளது.

ஊடக அமைச்சர் கயந்த கரு ணாதிலக்க இதனைத் தெரி வித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தெளிவான முரண் பாடு நிலவிவருகின்றது. இதன் காரணமாகவே மகிந்த பங்கேற் கும் கூட்டங்களில் சில வேட் பாளர்கள் பங்கேற்க மறுப்ப துடன் சில வேட்பாளர்களுக்கு கூக்குரல் எழுப்பப்படுகின்றது.

தோல்வியடைந்த ஒரு வேட் பாளர் தனது சுய இலாபத்திற் காக இவ்வாறு பிளவினை ஏற் படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் அளித்த வாக்குறுதி களை நிறைவேற்ற முடியாத மகிந்த ராஜபக்ஷ, நாடாளு மன்ற உறுப்பினராக தெரிவான தும் எவ்வாறு வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகின்றார் என வும் கயந்த கருணாதிலக்க இதன போது கேள்வி எழுப்பியுள்ளார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் - வன்னி)



சுந்தரம் குமாரசாமி



X

7

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


(மோசடி அரசியல்...)

"உரிய ஆற்றல் கொண்ட மனிதர்களை இணைத்து வேலை செய்வது பற்றியும் அக்கறை இல்லை.

சமூக அக்கறை மற்றும் போராட்டத்தில் பங்கு பற்றாத கோஷ்டிகள் மாகாண மட்டத்தில் அமைச் சர்களாகியிருக்கும் சூழ்நிலையில் சுயமாக வெளிநாடுகளில் இருந்து முதலீடு செய்ய முன் வருபவர்களை மனங்குன்றிப்போகச் செய்கிறார் கள். சமூகப் பிரக்ஞையற்ற இந்த கோஷ்டிகள் தமது சுயலாப நோக்கங்களுக்காக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்டர்கள் எனச் சொல்லப்படுபவர்களால் அரசியலுக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இதனால் யாரும் இங்கு முத லிட ஆர்வமாக இல்லை. உள்ளூராட்சி சபைக ளில் இருந்து மாகாண சபை வரை கோரும் தட்சனைகள் திடுக்கிட வைப்பனவாம்.

வழமையான அரசியலில் தட்சனை மாமூலான ஒன்றாக இருப்பதால் பெருமளவு இரத்தம் சிந்தப்பட்ட தமிழ்ச் சூழலில் வெட்கம் அற்று இந்தப் பிரகிருதிகள் இதனை எதிர்பார்க்கின்ற னவாம். இது உள்ளூராட்சி மட்டம் வரையில் விரவிக் காணப்படுகின்றது.

புரையோடிப்போன தீண்டாமை, வறியவர்களின் நிலப்பிரச்சினை, பெண்கள் மீதான வன்முறைகள் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சமூகப் பிரச் சினைகள் பற்றிய பிரக்ஞை, சமூக நீதி- சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அக்கறை இருக் கிறதா?

போதை வஸ்து பாவனை, வன்முறைகள்- ஆடம் பரங்கள், ஊதாரித்தனம், இயற்கை சுற்றாடல் அழிக்கப்படுவது, மீள்சுழற்சி இல்லா குப்பைக் கிடங்காக எமது பிரதேசங்கள் மாறி வருவது பற்றி எமது கல்வி முறை இதில் சீர் திருத்தம் தேவைப்படுகிறது. அது பற்றிய பிரக்ஞை இருக் கிறதா,

இன உரிமைகள், இனங்களின் சமத்துவம், இன சமூகங்களிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்து வதற்கு இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்.

பல்லினங்களின் நாடாக இலங்கையை உறுதிப் படுத்துவதில் இவர்களின் பங்களிப்பென்ன?

சமூகம் மீள் எழுவதற்கான -சமூக ஏற்றத் தாழ்வு களைக் குறைப்பதற்கான- சமூக அநீதிகளைத் துடைத்தழிப்பதற்கான - சமூக நல்லெண்ணங் களை உருவாக்குவதற்கான எந்தத் திட்டமும் இவர்களிடம் கிடையாது.

புலம்பெயர் வசதி படைத்தோரின் வேறு நாடுகள் வழங்கும் தனிப்பட்ட தட்சனைகளில் தான் கவனம்

சாதாரண மக்களின் பிரச்சினைகளை விற்று இங்கு பிழைப்பு நடத்தப்படுகிறது.

இவர்களை தமிழ் மக்கள் தோற்கடிக்காத வரை- உதைத்துத் தள்ளாத வரை விமோசனம் இல்லை.

விசச் சுழல் போல் ஒரே பொறியிலேயே தமிழ் மக்கள் விழுந்து கொண்டிருக்கிறார்கள். அது பற்றிய சுரணை எதுவும் யாழ் மையவாத தமிழ் சமூக சிந்தனைக்கு கிடையாது.

பரந்த உலக கண்ணோட்டம், நாடு இன சமூகங் கள், தமிழ் மக்களின் உரிமைகள், சமூகத் தேவை கள் பற்றி பரஸ்பர தொடர்புடன் அறிவார்ந்த முறையில் சிந்தித்து செயற்படுபவர்கள் தேவைப் படுகிறார்கள்.

சுடர் மிகு அறிவு கொண்டவர்கள், எளிமையான சமூக அக்கறையாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு கால மும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆவதில்லை. ஆகவும் முடியாது. யாழ் மையவாத தமிழர்கள் பெரும்பாலும் திருடர்களையும் போலிக் கன வான்களையுமே நேசிக்கிறார்கள்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏக போகத்திற்கெதிரான ஒரு உடைவு தெரிகிறது எவ்வளவு காலம் நீடிக்குமோ தெரியாது ஆனால் அது நல்ல சகுணமே.

18. நாய்களுக்கு வயிற்றுக்கோளாறு ஏற்படும் போது, நாய்கள் உட்கொள்ளும் மூலிகைத்தாவரம் எது?
1) அறுகம்புல் 2) பால் அறுகு 3) குப்பைமேனி 4) ஆமணக்கு

19. வீடுகளில் வைக்கப்பட்டிருக்கும் மீன் தொட்டியினுள் காணப்படும் நீர்த்தாவரம் எது?
1) சல்பீனியா 2) அல்லி 3) வலிசுனேரியா 4) தாமரை

20. விளையாட்டுப் போட்டியில் ஒரு ஓட்ட நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கான மூன்று கட்டளைகளையும் எழுதுக
............................................................

(14) கீழுள்ள விலைப்பட்டியலை அவதானித்து 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு விடை தருக

| | |
|---|---|
| 1kg சீனி | 65.00 |
| 1kg பருப்பு | 79.00 |
| 1kg தேயிலை | 480.00 |
| 1kg கருவாடு | 185.00 |

01. 750g சீனியையும், 100g தேயிலையையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?
............................................................

02. சுமதி ரூபாய் 800ஐ கொண்டு சென்று 100g சீனி, பருப்பு 250g, தேயிலை 450g கருவாடு 250g என்பன வாங்கினாள் எனில், மீதிப்பணம் எவ்வளவு?
............................................................

03. 4 பைகளில் உள்ள தானியத்தை 6 எலிகள் 4 நாட்களில் தின்று முடிக்கும் 3 எலிகள் இத்தானியப் பைகளை தின்று முடிக்க எத்தனை நாட்கள் எடுக்கும்?
............................................................

(15) கீழே தரப்பட்டுள்ள கடிதத்தை வாசித்து 01ஆம், 02ஆம் வினாக்களுக்கு விடை தருக

561 / 11, திருமலை வீதி,
மட்டக்களப்பு
28.05.2009

ஐயா,

தரம் 5 இல் கல்வி கற்கும் நான் சுகயீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை மிகத் தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

நன்றி

இங்கனம்
தங்கள் பணிவுள்ள
க.டினேஸ்

01. கடிதத்தை அனுப்பியவரது முகவரியை எழுதுக
............................................................

02. இக்கடிதத்தில் முக்கிய விடயம் ஒன்று எழுதப்படவில்லை அதனைக் குறிப்பிடுக
............................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

(01) 01. மாலை 02. மலர்ந்து 03. பூக்கள் மலர்ந்ததால் 04. சின்ன, கீழ், சின்னஞ்சிறு 05. காகம், சேவல், குயில், காகம் 06. நித்திரை, சயனம் 07. பூக்கள் 08.அதிகாலை நிகழ்வுகள் 09. பூ மலர்ந்தது பார் (02) 01. பாரி இரப்போர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் வள்ளல் 02. மின்னலுடன் பெய்த மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது (03) 01. தீர்க்கதரிசி 02. கஞ்சன் (04) 01. செழித்து 02. தேறீர் 03. ஆலையில்லாத (05) 01. vegetable (06) 01. இரவுவணக்கம் 02. உங்களுக்கு மிக்க நன்றி 03. தயவு செய்து அமைதியாக இரு (07) 01.4 02. 3 03. 1 04. 2 05. 2 06. 3 07. 2 08. 4 09. 3 10. 2 11. 2 12. 2 (08) 01. 24தடவைகள் 02. 30ஆடைகள் 03. 20 04. 9L 05. 3000g 06. 925ரூபா 07. 250ரூபா 08. 34 (09) விரும்பிய வசனம் (10) 01. 3 02. 3 03. 3 04. 3 (11) 01. 4 02. 1 (12) 01. 4 02. தரப்பட்ட விடை தவறானது சரியான விடை கமலா, விமலா, கலா, மாலா (13) 01. பொதுநலவாதி 02. ஜீவகாருண்யம்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் கவிதையை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

அறிவியல் தந்த அருங்கொடையாய்
அனைவர் கையிலும் செல் பேசி!
அவசர உலகம் ஆகையினால்
அவசியம் ஆனது செல் பேசி!

அடுத்தவருக்கு இடராய் இல்லாது - வரும்
அழைப்புக்கள் தனையும் ஏற்றிடுவாய்!
அவசியம் அற்ற அழைப்புக்களை
பயணத்தின் போது தவிர்த்திடுவாய்!

உரக்கப் பேசி உடன் இருப்போர்
வெறுப்பைத் தேடிக் கொள்ளாதே!
உணவு வேளையில் பேசுவதை - உன்
உயர்ந்த விருப்பமாய் செய்யாதே!

அறிவியல் தந்த கொடைகளை - தம்பி
அறிவு பூர்வமாய் பயன்படுத்து!
அறிவார்ந்த செயலால் இந் நிலத்தை
இனிய தம்பி நீயும் நெறிப்படுத்து!

01. அறிவியல் தந்த அருங்கொடை எது? ............................
02. செல்போன் என்பதன் தமிழ்வடிவம் என்ன? ............................
03. எப்படியான அழைப்புக்களை ஏற்றிட வேண்டும்? ............................
04. எப்போது அழைப்புக்களை தவிர்த்தல் வேண்டும்? ............................
05. பிறரின் வெறுப்பை எவ்வாறு தேடிக்கொள்கின்றோம் என கவிஞர் கூறுகிறார்?
............................
06. எவ்வேளையில் பேசுவதை உயர்ந்த விருப்பாய் கொள்ளக்கூடாது?
............................
07. அறிவியல் தந்த அருங்கொடைகளை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?
............................
08. கொடை என்பதன் ஒத்தசொல் எது? ............................
09. இக்கவிதையில் வரும் உயர்திணை, ஆண்பால், படர்க்கைச்சொல் ஒன்றைத் தருக ............................
10. அவள் ஒரு சிறந்த வீராங்கனை என்பதை ஆண்பால் வாக்கியமாக எழுதுக
............................

(02) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக
01. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து ............................
02. உண்ணாச் சொத்து மண்ணாய் போகும் ............................

(03) அடைப்புக்கள் உள்ள எழுத்தை தெரிவு செய்து பின்வரும் சொற்களை பூரணப்படுத்துங்கள்
(ல, ண, ன, ழ, ள)

01. பவ........ம் 02. விமா ......ம் 03. சார........ர்
04. நூ......கம் 05. வ......க்கு 06. மாது......ம்பழம்

(04) பின்வரும் கருத்துக்களுக்கு பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக
01. சிறைத்தண்டனை பெற்றவன் ............................
02. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் ............................

(05) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக
01. நின்றனர் / எல்லோரும் / வாகனத்தைப் / கொண்டு / பார்த்து
............................

**(06) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக**

01. Please come to school every day ..........................................

02. shall we start the game? ..........................................

**(07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக**

01. நாம் விளையாட்டு மைதானத்திற்கு போவோமா? ..........................................

02. நான் மெதுவாக நடப்பேன் ..........................................

**(08) இதன் கருத்தை தமிழில் எழுதுக**

01. ஒயா இன்னே கී වෙනි பந்தියෙ த? ..........................................

**(09) பின்வரும் வாக்கியத்தை பொதுப்பால் வாக்கியமாக்கி எழுதுக**


01. மாணவன் பாடம் படித்தான் ..........................................

**(10) பின்வரும் கருத்தை சிங்களத்தில் எழுதுக**

01. உங்கள் பாடசாலையின் பெயர் என்ன? ..........................................

**(11) பின்வரும் பறவையின் அலகுகளை கண்டுபிடித்து அதன் பெயரை எழுதுங்கள்**


(i) (ii) (iii) (iv)



- தாரா
- மயில்
- நெற்குருவி
- கிளி
- தேன்குருவி

**(12) பின்வரும் பறவையின் பாதங்களை கண்டுபிடித்து அதன் பெயரை எழுதுங்கள்**

(i) (ii) (iii) (iv)



- மயில்
- காகம்
- கொக்கு
- வாத்து
- கழுகு

**(13) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமுரிய சரியான விடையின் கீழ் கோடிடுக**


01. காவலாளிகளைக் கண்டதும் திருடர் கம்பி நீட்டினார் என்னும் மரபுத்தொடரின் பொருள்
1) ஓடி விட்டார் 2) பார்த்து நின்றார் 3) பயந்தார் 4) மறைந்து நின்றார்

02. 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
1) இங்கிலாந்து (லண்டன்) 2) கனடா
3) கிரீஸ் எதென்ஸ்) 4) சீனா

03. இலங்கையில் அநாதரவான யானைகளை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்
1) பின்னவல 2) வில்பத்து 3) குமண 4) யால

04. காற்றினால் பரம்பலடையும் வித்து எது?

(1) (2) (3) (4)



05. அஞ்சல் அலுவலகத்தில் தந்தியொன்றை அனுப்புவதற்கு அவசியமான சாதனம் எது?
1) கைபேசி 2) தொலைபேசி 3) கணனி 4) தொலைநகல்




06. பழங்களை நெடுக்காக வெட்டும்போது, பழத்தினுள்ளே எந்தவொரு வித்தும் காணப்படாத பழவகை எது?
1) அவகோடா 2) ஸ்ரோபரி 3) அன்னாசி 4) சப்படில்லா


07. வலைப்பந்தாட்ட அணியொன்றில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 5 2) 6 3) 7 4) 9

08. ஈரலிப்பான இடத்தில் வைக்கக்கூடாது என்பதை அறிவுறுத்த பொதிகளில் பொறிக்கப்பட்டுள்ள சர்வதேச குறியீடு எது?

(1) (2) (3) (4)




09. அருகில் தரப்பட்டுள்ள உடுத்தொகுதியின் பெயர் என்ன?
1) கலப்பை 2) சிம்மம்
3) பெருங்கரடி 4) பெருநாய்



10. பின்வரும் இலட்சினைகளில் சர்வதேச சாரணிய இலட்சினை எது?

(1) (2) (3) (4)



11. 

அருகில் காணப்படும் குறியீடு பொறிக்கப்பட்டிருக்கும் பொதி எது?
1) பிஸ்கற்
2) அயடீன் உப்புப்பொதி
3) மருந்து போத்தல்
4) சலவைத்தூள்

12. அருகிலுள்ள சிலை எந்த மன்னனுடையது?
1) தாதுசேனன் 2) மகாசேனன்
3) பராக்கிரமபாகு 4) துட்டகைமுனு



13. விவசாயிகளுக்கு பல்வேறு விதங்களில் உதவி செய்யும் பிராணி எது?
1) கறையான் 2) வண்டுகள் 3) தேனீ 4) வெட்டுக்கிளி

14. 

அருகிலுள்ள இவ்விதிச்சமிஞ்ஞையானது எதனைக் குறிப்பிடுகின்றது?
1) முன்னால் புகையிரத நிலையம் உள்ளது
2) முன்னால் பாதுகாப்பில்லாத புகையிரதக்கடவை உள்ளது
3) முன்னால் பட்லையுடன் கூடிய புகையிரதக்கடவை உள்ளது
4) முன்னால் புகையிரத இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

15. குளவிகள் கூடு அமைக்கப் பயன்படுத்தும் பொருள் எது?
1) களிமண் 2) மெழுகு 3) தாவரப்பசை 4) தும்புச்சோறு


16. நன்னீரில் மனிதனைக் கடிக்கும் நுளம்புகள் மூலம் பரவும் நோய் எது?
1) டெங்கு 2) சிக்கன்குனியா 3) மலேரியா 4) ஆனைக்கால்

17. பராக்கிரம சமுத்திரத்திற்கு அருகில் அமைந்துள்ள சரித்திரப்புகழ் பெற்ற நகரம் எது?
1) கண்டி 2) பொலநறுவை
3) பதுளை 4) அனுராதபுரம்

# தேர்தல் களம் 2015

## அரிதாக கிடைக்கும் தேர்தல் வாய்ப்பை மக்கள் நல்வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும்

### வேட்பாளர் ஶ்ரீரங்கேஸ்வரன் தெரிவிப்பு



ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை மக்களுக்குக் கிடைக்கும் பெரும் வாய்ப்பு, அவர்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் வழங்கும் ஆதரவு, நாட்டின் எதிர்காலத்திற்கும் நாடாளுமன்றத்தின் ஜனநாயக ஆட்சி முறைக்கும் மாட்சி தரும் நல் வாய்ப்பாக இருக்க வேண்டுமே தவிர நம்பிக்கைத் துரோகமாகி விடக்கூடாது ஆனால் கூட்டமைப்பினர் செய்து வந்த நம்பிக்கைத் துரோகங்களை பாமரர் முதல் படித்தவர் வரை மிகவும் துல்லியமாகக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர் என வடமராட்சி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான ஐயாத்துரை ஶ்ரீரங்கேஸவரன் தெரிவித்தார்.


வடமராட்சி கிழக்கு குடத்தனை, பொற்பதி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய வருடாந்த விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மனித இனம் எதிர்காலம் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் தான் நடைபோடுகிறது. கடந்த நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளும் நிர்வாகத்தின் நடைமுறைகளும் தமிழ் மக்கள் பாராட்டும்படியாக இருக்கவில்லை. இலங்கை ஜனநாயகத்தில் ஏமாற்றுத் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தமிழ் மக்கள் மீது பீடித்திருக்கும் அவலத்தை வேரறுத்து முடிவுக்குக் கொண்டுவரவும், மாற்றுத் தமிழ்த தலைமையை உருவாக்கவும், நடைபெறவுள்ள இந்தத்தேர்தலை பயன்படுத்துவதற்கு நமது மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றார்கள். மக்களிடம் பேசிய வீராப்புக்கள், ஆக்ரோஷ கர்ச்சனைகள் எல்லாம் தங்களது வாக்குக்களை அபகரிப்பதற்காகவே என்பதையும் அப்பாவித் தமிழ்ச் சமூகம் அறிந்து மனம் வெதும்பிய நிலையில் உள்ளனர். தமிழ் இனத்திற்கான அரசியல் தீர்வுகளை முன்வைக்காமல் ஏமாற்றி வந்த கூட்டமைப்பினர் தற்போது திம்புக் கோட்பாடுகளைப்பற்றி தமது விஞ்ஞாபனத்தில் குசுகுசுக்க முனைந்துள்ளனர். அது தான் தமது யோசனை எனவும் கூறமுனைகின்றனர். அன்று பூட்டான் பேச்சுவார்த்தையை கொச்சைப்படுத்தி சமஷ்டியை நிராகரிப்பதாக கூறிய சம்பந்தன் இன்று தடுமாறி தடம்மாறிப் புலம்புகிறார். இதுவும் வாக்குககுகளை கொள்ளையடிப்பதற்கான பாரிய சூழ்ச்சியே தவிர வேறு எதுவும் இல்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு மாவட்டங்களுக்கு இரண்டு வேட்பாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கேட்டபோது, எச்சசொச்சங்களை சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை இது அனந்திக்கும் பொருந்தும் என அவர்களைக் கொச்சைப்படுத்தியிருந்தார். உண்மையான புலிகள் சயனைட் கடித்து செத்திருக்க வேண்டும் என யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீர் தர மறுக்கும் சிறீதரன் சொல்லியுள்ளார். ஆனால் மருதனார்மடத்தில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் போது புலிகளின் தலைவர் பிரபாகரன் என சில புதுமுக வேட்பாளர்கள் உச்சரித்த போதும கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ, சுமந்திரனோ ஏன் மாவையர் கூட அதுபற்றி வாய் திறக்காமல் கவனமாக இருந்தனர். உண்மையில் கூட்டமைப்பினர் புலிகள் இயக்கத்தின் தலைமையை பகடையாக பயன்படுத்தி வாக்குக்களைப் பெறுவதற்கு மட்டும் உச்சரித்து வந்தமையை அனைவரும் அறிவர். ஆனால் தற்போது தான் புலிகள் இயக்கத்தினரை கூட்டமைப்பினர் நேரடியாகவே விமர்சிகக்கத் தொடங்கியுள்ளனர். இதன் மூலம் இது வரை காலமும் புலிகளின் அர்ப்பணிப்புக்கள் தியாகங்கள் வீரமரணங்களை கூட்டமைப்பினர் தமது வாக்கு வியாபாரத்திற்கு பயன்படுத்தியுள்ளமை வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. மறைந்த உறுப்பினர்கள் மற்றும் அவர்களது முன்னாள் உறுப்பினர்களின் உறவுகள் முன் வேஷம் போட்டு வாக்குப்பிச்சை கேட்டது அம்பலமானதால் கூட்டமைப்பு பல பிராயச்சித்தங்களை மேற்கொள்ள முனைகிறது. அரசியல் தீர்வை முன்வைக்காமல் மக்களை தாம் ஏமாற்றி வந்தமையை கூட்டமைப்பின் உள்ளூர்த் தலைவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். எனவே மக்களுக்கு ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் பெரும் வாய்ப்பு, அவர்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் வழங்கும் ஆதரவு, நாட்டின் எதிர்காலத்திற்கும் நாடாளுமன்றத்தின் ஜனநாயக ஆட்சி முறைக்கும் மாட்சிதரும் நல் வாய்ப்பாக இருக்க வேண்டும். ஆகவே ஏமாற்றுத் தமிழ்த் தலைமையை நிராகரித்து வீணைச் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

## கடந்த காலங்களில் வாக்கு பெற்றவர்களால் மக்கள் எவ்வித பயனையும் பெறவில்லை

### ஈ.பி.டி.பி.யின் முதன்மை வேட்பாளர் தெரிவிப்பு



கடந்த காலங்களில் உங்களிடம் வாக்குப் பெற்றவர்கள் உங்களை ஏமாற்றி, நட்டாற்றில் விட்டார்களேயொழிய, அவர்களால் நீங்கள் எவ்விதமான பலன்களையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் எம்மை நம்பி, எமக்கு. வாக்களித்தவர்களை நாம் ஒருபோதும் கைவிட்டதுமில்லை, ஏமாற்றியதுமில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். வன்னி தேர்தல் மாவட்ட (மன்னார்) நேற்று முன் தினம் விஜயம் மேற கொண்ட செயலாளர் நாயகம் தலைமன்னார்துறையில் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போது உங்களிடம் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட அரசியல்வாதிகள் நிறைவேற்றப்பட முடியாததும், உண்மைக்குப் புறம்பானதுமான பொய்யான வாக்குறுதிகளை வழங்கியதன் அடிப்படையில், நீங்கள் அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்தீர்கள். ஆனால், நடந்தது என்ன? உங்களின் வாக்குகளால் வெற்றி பெற்றவர்கள் தமது சுயலாபத்திற்காக அதனைப் பயன்படுத்தி வருகின்றார்களேயொழிய, மக்கள் நலன்சார்ந்து எவ்விதமான அபிவிருத்திகளையும் முன்னெடுக்கவில்லை.

இங்கு வாழ்கின்ற மக்கள் நாளாந்தம் எதிர்கொள்கின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள், குறைபாடுகள் பற்றி நான் அறிந்திருந்த போதிலும், அவற்றை உரிய முறையில் செயற்படுத்த முடியாமைக்கு எமது கட்சிக்கு அரசியல் பலம் இல்லாமை பிரதான காரணமாக உள்ளது.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)



சுப்பையா சந்துரு




8

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



## யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்!



X 4



சில்வேஸ்திரி அலென்ரின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

8



ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)

1




டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம் – ஈ.பி.டி.பி.)
முதன்மை வேட்பாளர்



இராமநாதன் ஐங்கரன்
(வலிகாமம் கிழக்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)

2




முருகேசு சந்திரகுமார்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

7



பசுபதி சீவரத்தினம்
(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)

6



'சொல்லின் செல்வர்'
இரா.செல்வவடிவேல்

3



திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா
(யாழ்.மாநகர முன்னாள் முதல்வர்)

5



சிவகுரு பாலகிருஸ்ணன்
(வலிகாமம் மேற்கு ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)

9



சூசைமுத்து அலெக்ஸாண்டர்
(தென்மராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)

10

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# மென்முறை வழியில் அதிர்வுடன் போராட்டம்

## போராளிகள் கட்சியின் விஞ்ஞாபனம்

அமைதி வழி முயற்சிகள் தோற்றால் போராட்டத்தை மென் முறை வழியில் அதிர்வுடன் தொடருவோம் என்று தெரிவித்துள்ளது ஜனநாயகப் போராளிகள் கட்சி. ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று நண்பகல் சுதுமலை அம்மன் கோயில் பகுதியில் வைத்து வெளியிடப்பட்டது.

அந்த விஞ்ஞாபனத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த விஞ்ஞாபனத்தின் முழு விவரம் வருமாறு:-

இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களின் தேசிய உரிமைகளுக்கான 67 ஆண்டு கால போராட்ட படிநிலை வரலாற்றில் புதிய தளமாக 2015 நாடாளுமன்றத் தேர்தல் இப்போது கட்டவிழ்கின்றது.

மூன்று தசாப்த கால அறவழிப் போராட்டங்களைத் தொடர்ந்து, மேலும் மூன்று தசாப்த காலம் முழுத் தீவையுமே உருட்டிப் போட்ட மறவழிப் போராட்டம், அதே ஆயுதமுனையில் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர் புதியதும், விசித்திரமானதுமான புறநிலைச் சூழலுக்குள் தமிழர்களின் அரசியல் செல்நெறி தள்ளப்பட்டிருக்கின்றது.

மறவழிப் போராட்டத்தில் கர்மவீரர்களாகக் களமிறங்கி, வார்த்தைகளில் அடக்கிவிட முடியாத அளப்பரிய அர்ப்பணிப்புக்களையும், நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத தியாகங்களையும், ஈண்டு குறிப்பிடவேண்டிய ஈகங்களையும் புரிந்தனர் தமிழீழ விடுதலைப் புலிகள். அந்தக் குழுமத்திலே புடமிடப்பட்ட போராளிகளான நாங்கள் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் சூழலின் பின்னர் தடுப்புக்குள் சிக்கி, முகாம்களுக்குள் முடக்கப்பட்டு, வெஞ்சிறைகளில் வாடி, புனர்வாழ்வின் பெயரால் வெளிப்பட்டு, இன்று ஜனநாயகப் போராளிகளாக உங்கள் முன்வந்து நிற்கின்றோம்.

கொடூர யுத்தத்துக்கு மத்தியிலும் - பெரும் நெருக்குவாரங்களுக்கு இடையிலும் - நம் தமிழர் தாயகத்தில் நமது மக்களுக்கென ஒரு சமாந்தரமான நடைமுறை அரசை செவ்வனே நடத்திக் காட்டிய போராளிகளான நாங்கள் - உலக வரைபடத்திலே நம் தமிழர் தாயகத்துக்கும் பொதுவாகவே உலகத் தமிழர்களின் இருப்புக்கும் ஒருங்கே சிறப்பையும், அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்து அதற்காகத் தம்மையே ஈந்த கர்மவீரர்களின் வழியில் அவர்களுடன் ஒன்றித்துப் பயணித்த நாங்கள் - தற்போது பிறந்துள்ள ஜனநாயகச் சூழலில், நமது தமிழ் மக்கள் தங்களின் அபிலாஷைகளை - வேணவாவை - விருப்பை - ஈட்டுவதற்கான தேசிய அரசியல் பாதையில் அவர்களை வழிநடத்திச் செல்வதற்கான தகைமையும், விருப்பும் உள்ளவர்கள் என்ற அவாவுடன் இந்தப் பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்காக உங்கள் முன்வந்திருக்கிறோம்.

நீண்ட கால அடக்குமுறை வரலாற்றுக்குள் சிக்கியிருக்கும் சிறுபான்மை இனத்தவர்களான நாங்கள், இன்று அரசியல், பொருளாதார, சமூக, வாழ்வியல், பண்பாட்டு ரீதியாகவும், கொடூர சட்ட அடக்குமுறை மூலமும் எதிர்கொண்டிருக்கும் பெரும் அரசியல் சவால்களை முறியடித்து மீள்வதற்கு அடம்பன் கொடி போல திரண்டிருப்பதே ஒரே உபாயம் என்பதை முழுமையாக உணர்ந்து ஏற்கின்றோம். ஆனால் எங்கள் தலைமையால் உருவாக்கப்பட்டிருந்த ஐக்கிய அரசியல் கட்டமைப்பு, எங்கள் மக்களுக்காக உயிரும், உதிரமும் கொடுத்துப் போராடிய போராளிகளான எங்களையே இந்த அரசியல் கட்டமைப்புக்குள் நுழையவிடாது நெட்டித் தள்ளும் கபடத்தனப் போக்கில் செயற்படுவதால், வேறு மார்க்கமின்றி, இந்தத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாக - சிலந்திச் சின்னத்தில் - களமிறங்கியிருக்கின்றோம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது

### வெடிபொருட்கள்.

ருந்து 6 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இங்கு வெடிமருந்து விற்பனைக்கான ஏற்பாடாக பெருமளவிலான எறிகணைகள் புதைக்கப்பட்டுள்ளன. அத்துடன் வெடிமருந்து அகற்றப்பட்ட–வெற்று எறிகணைகளும் பெருமளவில் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் அதிகளவான வெடிபொருட்கள் இத்தீவில் புதைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். இவ்வெடிபொருட்கள் மீட்கப்பட்டது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ,25)

### தேர்தலில்....

யாளமிட வேண்டும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அதற்குப் பிறகு ஏற்றுக் கொண்ட கட்சியின் அல்லது சுயாதீன குழுவின் வேட்பாளர்கள் மூன்று பேரின் இலக்கங்களுடைய சதுரத்தில் புள்ளடி அடையாளத்தை இட்டு விருப்புவாக்குகளை வழங்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வாக்குகள் எண்ணும்போது நிராகரிக்கப்படும் வாக்குகள் தொடர்பில் தேர்தல் செயலகம் பின்வருமாறு அறிவுறுத்தியுள்ளது.

எந்தவொரு அரசியல் கட்சி அல்லது சுயேட்சை குழுவின் பெயர் அடையாளமிடப்படாமை, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கட்சிக்கு மேற்பட்டவற்றுக்கு அடையாளமிடுதல், ஒன்றுக்கும் மேற்பட்ட சுயேட்சை குழுவிற்கு அடையாளமிடுதல், ஒன்றுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சி, சுயேட்சை குழு, கூட்டமைப்புகளுக்கு அடையாளமிடுதல்,வேட்பாளரை அடையாளம் காணும் வகையில் எழுதி அல்லது வரைந்திருத்தல், எந்த கட்சிக்கு, சுயேட்சை குழுவுக்கு வாக்களித்தல் என்பது குறித்த தெளிவின்மை போன்ற விடயங்கள் அடையாளம் காணுமிடத்து வாக்குகள் நிராகரிக்கப்படும்.

எவருக்கும் விருப்பு வாக்குகள் வழங்காதிருத்தல். மூன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளருக்கு விருப்பு வாக்குகள் வழங்கியிருத்தல்

தெளிவின்றி விருப்பு வாக்குகள் வழங்கப்பட்டிருக்கின்றமை அடையாளங்காணப்படல் போன்ற காரணங்களால் விருப்பு வாக்குகள் நிராகரிக்கப்படும் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது

### மக்களை ஏமாற்றும்....

காணப்பட வேண்டியதும் அவசியமானது.

இந்நிலையில் நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் எமக்கு அரசியல் பலத்தை தருவார்களேயானால் முன்னுரிமையடிப் படையில் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படும்.

எமது கட்சியின் நோக்கம் நடைமுறை யதார்த்த வழி முறையில் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்பதுடன் அது நிரந்தரமான தீர்வாக அமைய வேண்டுமென்பதே எமது நோக்காகும்.

எனவே, நடைபெறவுள்ள தேர்தலை சரியான முறையில் பயன்படுத்தி தொடர்ந்தும் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எமக்கு மக்கள் முழுமையான ஆதரவு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே குறிப்பாக குறித்த பகுதி கிராமத்தின் பொதுஅமைப்புகளுக்கு ஏற்கனவே டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்த நிதியுதவிக்கு மக்கள் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பியின் வேட்பாளர் ஐங்கரன் உடனிருந்தார்.

### ரிசாட் மீது..

திகதி மன்றுக்கு ஆஜராகும்படி அமைச்சருக்கு இவ் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### வடக்கில்..

தாக்குதல்கள், 2 காயமேற்படுத்தல்கள், 39 அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்றன கண்காணிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமான பாரிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ள மாவட்டங்களாக யாழ்ப்பாணம் (11), கம்பஹா (07), வன்னி (06) மற்றும் திகாமடுல்ல (06) ஆகிய மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது.

பாரிய சம்பவங்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தரப்பாக முறையே ஐ.ம.சு.முன்னணி (29), ஐ. தே. க. (24) மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி (08) பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்தலுக்குப் பின்..

முன்னணிக்கு ஆட்சியமைக்கும் அளவில் ஆதரவு கிடைக்காதோர் நிலையே காணப்படுவதால், மகிந்தவை அரசியலில் இருந்து கௌரவமாக, பிரியாவிடை கொடுத்து அனுப்பும் நோக்கி லேயே இப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்ததன் பிறகு, மகிந்த ராஜபக்ஷ தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வார், என்றும், அவர் தொடர்ந்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க மாட்டார், என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### வடக்கு முதல்வருடன்..

இவ்விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சருடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை அமைச்சர்கள் இருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் அக்கட்சியின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பொது மக்கள் சரியான, படித்த, ஊழல் அற்ற பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டுமென்றும், மக்கள யாரை தெரிவு செய்வது என்பது பற்றி அவர்களே சிந்திக்க வேண்டுமென்று ஊடகங்களுக்கு முதல்வர் கருத்து தெரிவித்திருந்தார்.

அந்த கருத்திற்கு அமைவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டங்களில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை.

இவ்வாறு இருக்கையில், வடமாகாண சபை அமைச்சர்கள் இருவர் முதலமைச்சரை அண்மையில் சந்தித்துள்ளனர்.

அவ்வாறு சந்தித்த இரு அமைச்சர்கள் முந்திரிக் கொட்டை மாதிரி முந்தி முதலமைச்சரை கேள்வி மேல் கேள்விகளாக பலகேள்விகளை கேட்டுள்ளனர்.

வடமாகாண முதலமைச்சரின் அண்மைய தேர்தல் தொடர்பான கருத்துக்களை விமர்சனம் செய்ததுடன், ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்றும் கேள்வி எழுப்பியதுடன், தகராற்றில் ஈடுபட்டுள்ளனர்.

முதலமைச்சர் பதுமையான பதில்களை அவர்களுக்கு தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கேள்வி கேட்டால் மட்டும் பதில் சொல்ல முடியுமென்றும், மற்றவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (25)



# பசில் ஒதுங்கிக் கொண்டது ஏன்? தெற்கிலிருந்து கசிகிறது தகவல்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்காக பல்வேறு அர்ப்பணிப்புக்களை மேற்கொண்ட முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இம்முறை நாடாளுமன்ற தேர்தல் நடவடிக்கைகளில் இருந்து முழுமையாக விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் சந்தர்ப்பத்தில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் ஏற்பட்ட மோதலே இதற்கான காரணமென அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பசில் ராஜபக்ஷவை பின்பற்றுவோர்களான ஜகத் வெள்ளவத்தை, தம்ம திசாநாயக்க, விஜித நாணயக்கார, நிமால் பண்டார மற்றும் ஊடகவியலாளரான சஞ்சீவ உட்பட சிலரினால் முன்னணிக்கான விஞ்ஞாபனம் தயாரித்திருந்த சந்தர்ப்பத்தில், கோத்தாபய ராஜபக்ஷவின் அறிவுரைக்கமைய தயான் ஜயதிலக, நாலக கொடஹேவா, சரித ஹேரத் உட்பட சிலர் இன்னும் ஒரு விஞ்ஞாபனத்தை தயாரித்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகர்கள் சிலர் விஞ்ஞாபனத்திற்கான பல கொள்கைகளை உள்ளடக்கியுள்ளனர்.

எப்படியிருப்பினும் பசில் ராஜபக்ஷ தரப்பினரால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடுவதற்கான அனைத்து ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷவை திட்டியதோடு அவரது தேர்தல் விஞ்ஞாபன பிரதிகளை தீ வைக்குமாறு தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் சமீபத்தில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமையவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுரைக்கமைய தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனமாகும்.

இதன் காரணமாகவே தான் பசில் ராஜபக்ஷ தனது தேர்தல் நடவடிக்கைகளில் இருந்து முழுமையாக விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஹபரணையில் விபத்து; தடம்புரண்டது கார்

(கொழும்பு)

மிக அதிக வேகத்தில் பயணித்த கார் வேகத்தை கட்டுப்படுத்த முடியாது தூக்கியெறிந்து மரத்துடன் மோதிய கோர விபத்துச் சம்பவம் ஹபரணை மின்னேரியா பொலனறுவை வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மூவர் கடும் காயங்களுடன் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் கடும் வேகமே இவ் விபத்துக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கந்தரோடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் நேற்று அதிகாலையில் வீடுகளுக்குள் புகுந்த முகமூடிக் கொள்ளையர்கள் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் இரண்டரை இலட்சம் ரூபா பணம் என்பனவற்றை சூறையாடிச் சென்றுள்ளனர்.

கந்தரோடை சுப்பிரமணியம் வீதியில் உள்ள வீடு ஒன்றினுள் முகத்தை வெள்ளைத் துணியால் மூடிக்கட்டிய நால்வர் கூரை வழியாக உள் நுழைந்து அங்கிருந்த சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சங்கிலிகள், இரண்டு சோடி தோடுகள் காப்புகள் மற்றும் ஆயிரம் பவுன்ஸ் வெளிநாட்டு கரன்ஸி என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்த வீட்டுக்கு சற்றுத் தள்ளி உள்ள மற்றொரு வீட்டினுள் நுழைந்த அதே கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை மிரட்டி சுமார் முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான பணத்தை கொள்ளையிட்ட அதேசமயம் அங்குள்ள அலுமாரிகளில் தேடுதல் நடத்திய போதிலும் தங்க நகைகளை எவையும் கிடைக்காத நிலையில் கைவிட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். நீண்டகாலத்தின் பின்னர் மீண்டும் இத்தகைய துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# வாகன விபத்து; பெண் காயம்; கோண்டாவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில், முத்தட்டுமடம் சந்தியில் வானுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

கோண்டாவில் கே.கே.எஸ். வீதியில் முத்தட்டுமடம் சந்தியிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

ஹைஏஸ் ரக வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வங்கியொன்றில் பணியாற்றும் ஊழியரான பெண் ஒருவரின் முகம் காயங்களுக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

காதலர்கள் இருவர் ஹைஏஸ் ரக வாகனத்தில் பயணித்த வேளை, பெண்ணின் சகோதாரர் மோட்டார் சைக்கிளில் அவர்களை விரட்டியவாறு பின்தொடர்ந்துள்ளார்.

பதற்றம் காரணமாகவே வாகனத்தை திருப்ப முற்பட்டவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் வாகனத்தின் பின்பக்கம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்த பெண் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (06)

# கோல்டன் கீ வழக்கிற்கு முற்றுப்புள்ளி


(கொழும்பு)

கோல்டன் கீ நிறுவனத்துக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கை நேற்றுடன் நிறைவு செய்வதாக உச்சநீதிமன்றம் அறிவித்தது.

வைப்பீட்டாளர்களது பணத்தில் 41 வீதத்தினை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருப்பதில் தாம் இம் முடிவுக்கு வந்ததாகவும், வைப்பீட்டாளர்கள் இதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் உச்ச நீதிமன்றம் மேலும் தெரிவித்தது.

உச்சநீதிமன்றில் இவ்வழக்கு தொடரப்பட்டு சுமார் 6 வருட காலம் ஆகின்றமை குறிப்பிடத்தக்கது.


# துருக்கி தூதுவருடன் மைத்திரி சந்திப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, துருக்கி தூதுவர் இஸ்கந்தர் கமால் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, துருக்கி தொடர்ந்தும் இலங்கையோடு நல்லுறவைப் பேணுவதற்காக ஜனாதிபதி தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# பௌத்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



(கொழும்பு)

சிங்கள தேசத்தைக் கட்டியெழுப்புவதாக வாக்குறுதி அளித்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 61 சிங்கள, பௌத்த பேரினவாத அமைப்புகளுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார்.

கொழும்பு விகாரமாதேவி உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் இந்த உடன்பாடு கையெழுத்திடும் நிகழ்வு இடம்பெற்றது.

61 சிங்கள, பௌத்த அமைப்புக்கள் இணைந்து 5 விடயங்களை வலியுறுத்தும் வகையில், தேசிய உடன்பாடு என்ற இந்த புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது.

# தேர்தலை புறக்கணிக்க தீர்மானம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவ்ட்டத்தில் உள்ள காணாமற் போனவர்களின் உறவுகளின் கண்டன போராட்டம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு திருகோணமலை சிவன் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட சிவில் சமூகம் மற்றும் திருகோணமலை மாவட்ட காணாமற்போனோர் சங்கத்தினரால் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்போராட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த உறவுகளை இழந்தோரின் உறவினர்கள் பங்கேற்றனர்.

பல அரசியல்வாதிகள் காணாமற்போனோர் தொடர்பில் பேசுகின்ற போதிலும் இதுவரை காலமும் எந்தவிதமான முடிவுகளையும் பெற்றுத்தரவில்லை எனவும் அதன் காரணத்தினால் இம்முறை தேர்தலை புறக்கணிப்பதாக தீர்மானித்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

# போதைவஸ்து கடத்தல் இலங்கையர் உட்பட ஐவர் கைது

இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் நடைபெறும் சட்ட விரோத நாணயம் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய 5 பேர் கைது செய்யபட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையைச் சேர்ந்த இருவர் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாணயங்களை சட்ட விரோதமாக இலங்கையில், அச்சிட்டு இந்தியாவிற்கு கடத்திச் செல்லும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த 6 பேர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்திய பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே, பல இலட்சம் பெறுமதியான இந்திய ரூபாய் சட்டவிரோத நாணயங்களுடன் குறித்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை ரூ. 2.00

# மாலை முரசு

தேர்தல் கால·மாலைப் பதிப்பு

05.08.2015 | புதன்கிழமை | பக்கங்கள் - 4

**அழிவா! - ஆக்கமா!!**
**மக்கள் தீர்ப்புக்கு இன்னமும்**
**12**
**நாட்கள் மட்டுமே!**

# என்னுடன்தான் டக்ளசும் கதையளக்கிறார் அங்கஜன்





எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைகள் நாடளாவிய ரீதியில் பரபரப்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மத்தியிலும் தேர்தல் பரப்புரைகள் மாறுபட்ட விதத்தில் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த ஒருசில தேர்தல்களைப் போல் அல்லாமல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இம்முறை தனது சொந்த சின்னமான வீணைச் சின்னத்தில் போட்டியிடுகிறது. கடந்த சில தேர்தல்களில் மக்களால் அறியப்படாமல் இருந்த இந்த வீணைச் சின்னத்தை மக்கள் மத்தியில் பிரபல்யமாக்கும் பணிகளில் அந்தக் கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதே வேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அந்த கட்சியின் முதன்மை வேட்பாளரும், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பகுதி மக்களின் பேரன்பைப் பெற்றவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களும், வெற்றிலைச்சின்னத்திலேயே போட்டியிடுவதாக பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்.

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற டக்ளஸ் தேவானந்தா அவர்களும் தனது சின்னமாகிய வெற்றிலைச்சின்னத்திலேயே போட்டியிடுவதாக தெரிவித்தால், அவரின் ஆதரவு வாக்குகள் தனக்குக் கிடைக்கும் என்கிற பகற் கனவுடனேயே அங்கஜன் இராமநாதன் இப்படியான பொய்ப் பிரசாரத்தை மேற்கொள்வதாக ஈழ மக்கள் ஜனநாயகக்

03 பக்கம் பார்க்க

## கொலம்பிய அழகுராணிக்கு சீனாவில் மரணதண்டனை



கொலம்பியாவைச் சேர்ந்த அழகுராணியொருவர், போதைப் பொருள் கடத்தல் குற்றத்திற்காக சீனாவில் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்.

ஜுலியானா லோபஸ் எனும் இந்த அழகுராணி யுவதி சீனாவுக்கு கொகேய்ன் எனும் போதைப்பொருளை கடத்திச் சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

அவரை சீன அதிகாரிகள் கடந்த மாதம் 18 ஆம் திகதி கைது செய்தனர்.

22 வயதான ஜுலியானா லோபஸ், கொலம்பியா வின் வடமேற்கு பிராந்திய-மொன் றின் அழகுரணி போட்டியொன்றில் முதலிடம் பெற்று முடிசூட்டப்பட்டவர். கடந்த வாரம் மிஸ் வேர்ல்ட் கொலம்பிய அழகுராணி போட்டியி

03 பக்கம் பார்க்க

## குறைக்கப்பட மாட்டடாது படை அணிகள் UNP அரசின் பாதுகாப்பு அமைச்சர்

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறையோடு இருக்கின்றது. அப்படியான நிலையில் முப்படையினரின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலைகொண்டுள்ள முப்படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சியினர் பொய்ப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் அவ்வாறானதொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை முன்னிட்டு, எதிர்க்கட்சியினரால் வழமையாக முன்னெடுக்கப்படும்

03 பக்கம் பார்க்க

## சிறீதரனின் தேர்தல் பிரச்சாரத்தில் கிளிநொச்சி பாடசாலை மாணவர்கள்

**- வெளியாகியது புகைப்பட ஆதாரம் -**



தனிநபர்களின் அரசியல் நலன்களுக்காக மாணவர்களின் கல்வி கற்கும் உரிமை பறிக்கப்படுகிறதா? பளைப்பிரதேசத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி பாடசாலை மாணவர்களை தனக்கான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி வருகிறார் இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன். கடந்த 30.07.2015 வியாழக்கிழமை அன்று, பளை மத்திய கல்லூரி மாணவர்கள்

03 பக்கம் பார்க்க

## முதியோர் இல்லமாகிய கூட்டமைப்பு தலைமையை சாடுகிறார் வேட்பாளர்

கூட்டமைப்பினுள் இளம் அரசியல் தலைமை காலத்தின் தேவையாக இருப்பதாக ஊடகவியலாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்டவேட்பாளருமான யதீந்திரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியினிலேயே இதனைத் தெரிவித்த யதீந்திரா கூட்டமைப்பு என்பது தற்போது முதியவர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களிற்கான விடுதியாகிவிட்டது. இதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. ஆரம்பத்தில் இளம் சமூகத்தின் தியாகங்களை வேண்டியவர்கள்இ தேவைப்பட்டவர்கள் தற்போது அவர்களை புறந்தள்ளி தமதும் தம் குடும்பத்தவரினதும் நலன்களை மட்டும் பாதுகாக்க முற்படுவதாகவும் யதீந்திரா தெரிவித்தார்.

இந்நிலை தொடருமானால் இளம் தலைமுறையின்தலைமைஎன்பது அறவே

03 பக்கம் பார்க்க



# பிரபாகரனின் பெருமைகள், புலிகளின் செழுமைகள் சூறையாட முனையும் கூட்டமைப்பு

- தி.பரந்தாமன்

(நேற்றைய தொடர்ச்சி)

"இதோ பாருங்கள்! வன்முறை அரசியலில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்த விடுதலைப் புலிகளை நாங்கள் மென்முறைப் பாதைக்கு கொண்டுவந்து விட்டோம். ஜனநாயகத்தில் அவர்களை நம்பிக்கை கொள்ள வைத்துவிட்டோம். தேர்தல் அரசியலிலே நாட்டம் கொள்ள வைத்து அவர்களைப் பகிரங்கத்திற்கு கொண்டுவந்துவிட்டோம். அவர்கள் இப்போது எங்கும் பதுங்கியிருக்கவில்லை. கபட நோக்கங்கள் எதுவும் இப்போது அவர்களிடத்தில் இல்லை. பிரிவினைவாதத்தைக் கைவிட்டு சிங்கள மக்களுடன் இணைந்து வாழ அவர்கள் தயாராகிவிட்டார்கள். அதனால்தான் அவர்கள் நாடாளுமன்ற அரசியலுக்குள் நுழைந்துள்ளார்கள். அவர்களையிட்டு நீங்கள் அச்சம் கொள்ள எதுவும் இல்லை. ஒன்றுபட்ட இலங்கைக்காகவே தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நாங்கள் இதனைச் செய்திருக்கின்றோம். ஜனநாயக நீரோட்டத்திற்குள் நாங்கள் கொண்டு வந்திருக்கும் புலிகள் மீண்டும் வன்முறைப் பாதைக்குச் செல்லாமல் நாம் எல்லோரும் அவர்களை இங்கு வரவேற்க வேண்டும். அவர்கள் இங்கேயே நிலைத்திருக்க அவர்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டும். இந்தப் பணியில் சிங்கள மக்களாகிய உங்கள் எல்லோரது ஒத்துழைப்பையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் வேண்டி நிற்கின்றோம்" இப்படிச் சொல்லுவதையே சிங்களவர்கள் நம்புவார்கள். இப்படி வாதிடுவதன் மூலம் தானே தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பிரிவினைவாதிகள் அல்லர் என்பதையும் கூட சிங்களவர்களிடத்தில் நிரூபித்திருக்க முடியும்? சிங்கள மக்களின் மனங்களில் இருக்கும் அச்சங்களைப் போக்கவும் இதுதானே வழியாக இருந்திருக்கும்? புலிகளைத் தொடர்ந்தும் மறைத்து வைத்தபடி வாக்குவேட்டைக்காக மட்டும் அவர்களது நாமங்களை உச்சரித்தால் தானே "புலிகள் பதுங்குகின்றார்கள் பாயப் போகின்றார்கள்" என்ற மஹிந்தவின் வாதம் சிங்களச் சனத்திடம் விற்பனையாகும்?

கடந்த வாரம், கொழும்பில், வெளிநாட்டுத் தூதரக அதிகாரி ஒருவர் இந்த விவகாரம் தொடர்பாகக் கதைத்தார். மேற்கூறிய எனது கருத்தை நான் முன்வைத்த போது அவர் சொன்னார் –

"இறுதிப் போரின் பின்பு அரசின் பொறுப்பிற்கு வந்த புலிப் போராளிகள் ராஜபக்ஷ அரசினாலேயே வடிவமைக்கப்பட்ட புனர்வாழ்வு வேலைத்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டவர்கள். அந்த புனர்வாழ்வு நடவடிக்கையை வடிவமைப்பதில் பங்காற்றியதுடன், அது செயற்படுத்தப்பட்ட முறைமையை நாம் நெருக்கமாகக் கண்காணித்தும் வந்தோம். வன்முறைப் பாதைகளில் பயணித்தோரை இயல்பு வாழ்வுக்குத் திரும்ப வைப்பதற்கு உலகின் பல்வேறு நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்ட புனர்வாழ்வு வேலைத்திட்டங்களுள் சிறந்த ஒன்றாக ராஜபக்ஷ அரசின் வேலைத்திட்டத்தை நாம் கருதுகின்றோம். முழுமையான புனர்வாழ்வுக்குப் பின்பு, சமூகத்தோடு கலந்து இயல்பு வாழ்வை முன்னெடுக்கத் தகுதியானவர்கள் என தாம் கருதியவர்களை மட்டுமே அவரது அரசு விடுவித்துள்ளது. அவரது அரசினால் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டவர்கள் ஜனநாயக அரசியலில் கலப்பதை ஒரு பிரச்சினையாக அவர் பிரச்சாரம் செய்ய முடியாது. அவர்கள் மீண்டும் வன்முறைப் பாதைக்குத் திரும்புவதைத் தடுப்பதற்கான வழிகளுள் ஒன்றாக, ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் அவர்களுக்குரிய இடங்கள் அளிக்கப்படுவதையே நாமும் விரும்புகின்றோம். இதே கோணத்தில் நோக்குகையில், இந்தியா கூட இதனை ஒரு நல்ல விடயமாகக் கருத முடியும். இருக்கின்ற கட்சிகளுக்குள் இடங்கள் அளிக்கப்படவில்லையெனின், தமக்காகத் தனிக்கட்சி அமைப்பது அவர்களது உரிமை. இலங்கையின் சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் இயங்குவார்களெனின், அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும். தேர்தலின் போது இந்த முன்னாள் புலிகளை மக்களே நிராகரித்துவிட்டால் அது வேறு விடயம். ஆனால், ஒரு பொது நோக்கத்திற்காகத் தமது வாழ்வைச் செலவிட்டவர்கள் தற்போதைய சூழலில் தமக்கான அரசியல் அங்கீகாரத்தை ஒரு ஜனநாயக முறையினூடாக மக்களிடம் கோருவதை யாரும் பிழையாகப் பார்க்க முடியாது.

அதனை நிராகரிப்பது உகந்ததல்ல. அவ்வாறு நிராகரிக்கப்படுமிடத்து, அவர்கள் ஜனநாயக முறைகளுக்கு வெளியில் சென்று தமக்கான அங்கீகாரத்தைத் தேடத் தலைப்படுவார்கள். அது எவருக்குமே நல்லதல்ல. அதே நேரத்தில் அவர்களும் தமக்காகவே இதனைச் சுதந்திரமாச் செய்ய வேண்டும் என்பதும், வேறு தரப்புக்களது விருப்பங்களுக்காகச் செயற்படக்கூடாது என்பதும் முக்கியமானது."

சிவஞானம் சிறீதரன் எனும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதிதிகள் நிறைந்த அரங்குகள் முதல் ஐந்தாம் வகுப்பு பிள்ளைகளின் பள்ளிக்கூடம் வரை "பிரபாகரனே எனது ஆத்மார்த்த தலைவன்" என்று பகிரங்கப் பிரகடனங்கள் செய்கின்றார். "விடுதலைப் புலிகள் கட்சியே எனது கட்சி" என்று தமிழரசுக் கட்சிக் கூட்டத்திலேயே பெருமைப்படுகின்றர்.

(தொடரும்)

# மதுவிலக்குக்கு போராட்டமும் திண்டாடும் குடிகாரரும்

இந்தியாவின் தமிழகத்தில் முழு மதுவிலக்கு கோரி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஓரளவு ஆதரவு காணப்பட்டது. அதேவேளையில், மாநிலம் முழுவதும் மதுவிலக்கு போராட்டம் மேலும் தீவிரம் அடைந்துள்ளது.மதிமுக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட அரசியல் அமைப்புகள் விடுத்த அழைப்பின்படி, மாநிலம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே, பல்வேறு கட்சிகள், மாணவர்கள், பெண்கள் உள்ளிட்ட பல தரப்பினரின் வெவ்வேறு வடிவிலான மதுவிலக்கு போராட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக தீவிரமாக நடந்தன.

குறிப்பாக, பல்வேறு நகரங்களில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் போராட்டக் களத்தில் இறங்கினர்.போராட்டம் நடத்தியவர்களை போலீஸார் கைது செய்தனர். முழு அடைப்பில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர பெரும்பாலான மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. ஆனால், மறியல் மற்றும் போராட்டங்கள் தமிழகம் முழுக்க வலுபெற்று இருந்தன. அதேவேளையில், பதற்றமான அனைத்துப் பகுதிகளிலும் உரிய போலீஸ் பாதுகாப்புடன் டாஸ்மாக் கடைகளில் விற்பனை நடைபெற்றது.




## கொலம்பிய...

லும் அவர் பங்குபற்றவிருந்தார்.

ஆனால், தற்போது அவர் சீன சிறைச்சாலையொன்றில் விளக்கமறியல் கைதியாக உள்ளார்.

மடிக்கணினியொன்றுக்குள் வைத்து போதைப்பொருளை கடத்தி வந்ததாக சீன அதிகாரி கள் அவர்மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

சீனாவில் போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்கு ஆயுள்தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக பாரிஸ் நகரில் வைத்து தம்முடன் ஜுலியானா தொடர்புகொண்டார் என அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதன்பின்அவர்மின்னஞ்சல்களுக்கோ, பேஸ்புக், வட்ஸ் அப் மூலமான அழைப்புகளுக்கோ பதிலளிக்கவில்லை என அவர்கள் கூறுகின்றனர்.

ஜுலியானாலோபஸ்,சீனாவுக்குச்சென்றமை இது முதல் தடவை அல்லவென அவரின் குடும்பததினரும் நண்பர்களும் தெரிவித்துள்ளனர்.

சீனாவுக்குச் சென்று ஆடைகள், பைகள் முதலானவற்றை வாங்கிக்கொண்டு வந்து கொலம்பியாவில் விற்பனை செய்வதை அவர் வழக்கமாக கொண்டிருந்தார் எனவும் இந்தத் தடவையும் அதற்காகவே அவர் சீனாவுக்குச் சென்றார் எனவும் ஜுலியானாவின் நண்பரான லிஸ் ஹெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

"அவர் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டார் என இதயம் கூறுகிறது. அவர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும்விடுபடுவார்எனநம்புகிறேன்"எனவும் லிஸ் ஹெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவியான ஜுலியானா, கொலம்பியாவில் மொடல்கள், நட்சத்திரங்கள் பங்குபற்றும் கால்பந்தாட்ட அணியொன்றிலும் அங்கம் வகித்து வந்தார்.

தற்போது ஜுலியானா லோபஸின் விடுதலைக்கான நடவடிக்கைக்காக சீனாவுக்குச் செல்வதற்கு அவரின் தாயார் திட்டமிட்டுள்ளார்.

இப்பயணத்திற்காகவும்ஜுலியானாவுக்கான சட்டத்தரணியொருவரை நியமிப்பதற்காகவும் தம்மிடம் போதிய பணம் இல்லாததால் தமது வீட்டை விற்பனை செய்வதற்கு அவரின் பெற்றோர் தீர்மானித்துள்ளனராம்.

ஜுலியானாவின் தாயார் சீனாவுக்குச் செல்வதற்கு நிதி திரட்டுவதற்காக கண்காட்சி கால்பந்தாட்டப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனச் சிறைச்சாலைகளில் நூற்றுக்கும் அதிகமான கொலம்பிய பிரஜைகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக சிறையிலடைக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

## மொக்கனின் முனகல் - 03

# கேள் வரகில நெய் வடிகிறதெண்ட கதைதான் அடுத்த ஆவணிக்குள்ள அரசியல் தீர்வெங்கிறது

வரப்போகும் எலக்சனே தமிழரசுக் கட்சியின் ,இறுதிப்பயணம் எண்டு சம்மந்தர் ஐயாவும் சொல்லிப் போட்டார். அவர் சொன்னத அறிஞ்ச மொக்கியும் "சீமான்ர வாய் பொன் வாயாகட்டும்" எண்டு உடனடியா வாழ்த்திப்போட்டாள். அவளோட இத்தனை வருசமும் சீவிச்ச எனக்கு அவளின்ர வாழ்த்தில நிறைய நம்பிக்கை இருக்குது. என்ர சீமாட்டி வாழ்தினாத் தப்பாது. ஊரில ஆரும் செத்துக்கெட்டால் செய்யிற கிரியைகளை இறுதிக்கிரியை எண்டு வாங்கள். பிரேதம் சுடலைக்குப் போறதை இறுதி யாத்திரை எண்டு சொல்லுவாங்கள். சம்மந்தரும் சரியாத்தான் சொல்லியிருக்கிறார் எண்டு மொக்கன் நினைக்கிறான். தந்தை செல்வநாயகம் சாக முந்தி தமிழினத்தை கடவுள்தான் காப்பாத்தவேணும் எண்டு சொல்லிச் செத்தார். இனித்தான் அது சரிவரப்போகுது. கூட்டமைப்புக் காரற்றை ஏமாத்துக்கெல்லாம் கடவுளால இந்த முறை ஒரு முடிவு வரப்போகுது. சம்மந்தற்ற தலைமையில கட்சியின்ர இறுதிப்பயணமும் நடக்கப் போகுதெண்டு மொக்கன் முழுசா நம்புறான். இந்த முறை சனம் பாடை கட்டி வடிவா இவையை அரசியல் சுடலைக்கு வழியனுப்பி வைக்குங்கள். எங்கண்ட யாழ்ப்பாணத்த பொறுத்தளவில இது கட்டாயம் நடக்கத்தான் போகுது. சம்மந்தரோ, மாவை சேனாதிராசாவோ அல்லது பிரேமச்சந்திரனோ தமிழ் மக்களை காப்பாத்துவினம் எண்டு செல்வநாயகம் சொல்லீட்டுச் சாகேல்லை. எங்கண்ட விக்கி ஐயா லண்டனில பேசின பேச்சு எங்கண்ட கூட்டமைப்புக் காரருக்கு சரியான ஒரு அடியா விழுந்திருக்குது. எலக்சனில வந்து நிண்டு உரிமைகள், தியாகங்கள் எண்டு சனங்களை உசுப்பேத்தி வாக்குகளை அள்ளிக்கொண்டு போற வழமையான நடைமுறையை வடிவாப் போட்டு உடைச்சிருக்கிறார். கூட்டமைப்புத் தலைவர்மாற்றை பொட்டுக்கேட்டை புலம்பெயர் தமிழருக்கு வடிவா எடுத்துச் சொல்லியிருக்கிறார். இது தமிழரசுக் கட்சிக்காரற்றை இறுதிப்பயணத்துக்கு முற்கூட்டிய அஞ்சலிப் பேச்சு எண்டதுதான் சொல்லவேணும். பக்கத்து வீட்டுப் பெரியவரும் இந்தப் பேச்சை மூண்டு தரம் வாசிச்சு விளங்கப்படுத்தினார். மொக்கனுக்கும் அத கேக்க கேக்க பெருத்த சந்தோசமாக் கிடந்துது. விக்கி ஐயா லண்டனில பேசக்கில்ல கனடாவிலகூட இத நேரடியாக ஒளிபரப்பினவங்களாம். ஐயாவின்ர பேச்சுக்கு அவனுகள் மத்தியில அந்தமாதிரி வரவேற்பாம் எண்டு கதை வருகுது. கூட்டமைப்புக்காரர் ஒரு புறமிருக்க சோரம் போகாத விஜயகலா அம்மை யாரும் இன்னொரு பக்கம் வெளிக்கிட்டிருக்கிறா. மொக்கனுக்கு அவர் சோரம் போகேல்லையோ, அவற்ற தலைமைத்துவம் சோரம் போகேல்லையோ எண்டு ஒண்டுமா விளங்கேல்ல. தினக்குரலில அவவுக்காண்டி வந்த விளம்பரத்தில வந்ததை வாத்தியார் எனக்கு வாசிச்சுக் காட்டினார். மொக்கியும் அண்டைக்குத் தொடக்கம் யாரந்த அம்மையார் கேட்டுக்கொண்டு இருக்கிறாள். புங்குடுதீவில வித்தியாவை வேட்டையாடிக் குதறிய காமவேட்டைக்காரருக்கு மேல அடிவிழாமல் கைநீட்டித் தடுத்து அபயக்கரம் கொடுத்த அம்மையார்தான் இவ எண்டு மொக்கன், மொக்கிக்கு வடிவா விளங்கப் படுத்திவிட்டான். அவவும் இண்டைக்கு வாக்குக்கேட்டு வெளிக்கிட்டிருக்கிறா. சனம் ஒண்டையும் லேசா மறக்காது எண்டது இனித்தான் இவைக்கு தெரியவரும்.

விட்டேனோ நானும் எண்டு சுரேஸ் பெடியனும் வெளிக்கிட்டு நிக்கிறான். தம்பியை வெல்லவச்ச பெருமையில அண்ணனும் இப்ப உசாராய் வெளிக்கிட்டிருக்கிறார். அவற்ற விளம்பரம் எண்டாப்போல கொஞ்சமும் குறையவில்லை. அதுவும் வாத்தியார் தினக்குரலில இருந்துதான் வாசிச்சுக் காட்டினவர். அதிகாரத்தைக் கைப்பற்ற ஆக்கிரமிப்பை அகற்ற அவருக்கு வோட்டுப் போடட்டாம். புலியள் அதிகாரத்தை கைப்பற்றி முடிஞ்சுது இனி புலி வாலில தொங்கின இவர் கைப்பற்ற வெளிக்கிட்டிருக்கிறார். யாருக்குக் கதைவிடுறார் கதை. ஆக்கிரமிப்பை அகற்றப் போறாராம். கட்டைப்பிராயில கொட்டன் முறிச்சுக்கொண்டு பலாலிக்குள்ள பாயப்போறாரோ. பெரிய கதையெல்லாம் கதைக்கினம். சனங்களை வெறும் பேயள் எண்டு நினைக்கினம். யார் பேப்பட்டம் கட்டுப்படபோகுதெண்டு ஆவணி பதினேழு இரவு ஊருக்கு உலகத்துக்கெல்லாம் தெரியவரும். ஊடகப் போராளி எண்டு தனக்குத்தானே பட்டம் சூட்டிக்கொண்டு உதயன் முதலாளியும் ஊரெல்லாம் உசாராத் திரியிறாராம். அவரும் இந்த முறையும் பாலிமந்துக்கு போகலாம் எண்டுதான் எண்ணி இரவு, பகலா வேலை செய்யிறார். ஆனால் இது பகல் கனவாத்தான் போகும். உலகத்துக்கு தமிழ் மக்களின்ர போராட்டத்தைப் பத்தி இவர்தானாம் எடுத்துச் சொன்னவராம். இவரப் பற்றி இப்ப சனம் கவலைப்படயில்லை. கொஞ்சப் போராளி பெடியங்களையும் தன்னோட சேத்துக்கொண்டு எலக்சன் கேக்க வந்து நிக்கும் வித்தியாதரன் மச்சானை நல்லாக் கவனிச்சுக் கொள்ளுவார். அவரும் இவரும் பட்டதேபாடு. எலக்சன் முடிஞ்சாப் பிறகு முடிவுகளும் வந்தாப் பிறகு பழைய கோபதாபங்கள் எல்லாத்தையும் மறந்து ஒருவரையொருவர் கட்டிப்பிடிச்சு அழவேண்டியதுதான்.

பெடியங்களை உசுப்பேத்தி எழுத்தாலே, பேச்சாலே தூண்டி பலிகொடுத்து தாய் தேப்பன்மாரை அழவைச்ச மேடைப் போராளித் தலைவர்மாரெல்லாம் இந்தமுறை தலைகுப்புற விழுவினம். சனம் நல்லாத் தெளிஞ்சுதான் நிக்குதுகள். சனங்களை அழ வச்சவை அழ வைச்சு எலக்சனில வெண்டு சிரிச்சவை இந்தமுறை அழுவினம். எங்கண்ட வெளிநாட்டுக்காரர் எல்லாரும் இந்த முறை பொன்னம்பலம் ஐயாவின்ர பேரப் பொடியனை வெல்ல வைக்க வேணுமெண்டு நிக்கினமாம். எது எப்படி எண்டாலும் மொக்கனுக்கு ஒண்டுதான் முக்கியமா வேணும். இது என்னண்டால் இந்தக் கூட்டமைப்புக்காரரை கூண்டோடை வீட்டுக்கு அனுப்பவேணும். இதுக்கு நீங்கம் உசாரா நிண்டு வேலை செய்வியளோ எண்டு மொக்கன் கேக்கிறான். அடுத்த ஆண்டு ஆவணிக்குள்ள தமிழருக்கு ஒரு அரசியல் தீர்வெண்டு சம்மந்தர் ஐயா சொல்லிப்போட்டார். இதைக் கேட்ட மொக்கனுக்கு அப்பு ஆத்த சொல்லுற ஒரு பழமொழி ஞாபகம் வருகுது. "கேள் வரகில நெய் வடிகிறதென்றால் கேட்பவருக்கு மதியென்ன" மொக்கன் இப்பவும் கேக்கிறான் இனியும் கேப்பான்.

---

## குறைக்கப்பட...

பொய்ப் பிரசாரங்களைக் கேட்டு பொதுமக்கள் ஏமாந்துவிடக் கூடாது என்று சுட்டிக்காட்டிய ருவான்

விஜயவர்த்தன, படையினரின் நலனுக்காக விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## என்னுடன்...

கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது தலைவர் வீணைச் சின்னத்திலேயே இம்முறை போட்டியிடுவதாகவும் அங்கஜன் இராமநாதன் போன்றவர்களின் இப்படியான பொய்ப் பிரச்சாரங்களில் ஏமாறாமல் மக்களை விழிப்புடன் இருக்குமாறும் அந்தக் கட்சி வட்டாரங்கள் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளன.

2009 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக சூழலின் பின்னர் இடம்பெற்ற தேர்தல்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிவெற்றிலைச்சின்னத்தில்போட்டியிட்டதனை தனக்கு சாதகமாக இந்தத் தேர்தலில் அங்கஜன் இராமநாதன் பயன்படுத்த முனைகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறீதரனின்...

பாடசாலை நேரத்தில் காலை 11.00 மணியளவில் பகிரங்கமாகவே பாடசாலை சீருடையுடன்தேர்தல்பரப்புரையில்ஈடுபடுத்தப் பட்டனர். இதைக்கண்ட. பொதுமக்கள் மாணவர்களைக் கண்டித்தனர். மாணவர்களின் பெற்றோர்களும் பள்ளிக்கூடம் போறன் எண்டு சொல்லிப்போட்டு நோட்டீஸ் குடுத்துக்கொண்டு திரியுறுறீயோ. பொறு அதிபரிட்ட வந்து கதைக்கிறன். என்று மனம் நொந்து கடிந்துள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு ஊக்கமாகவும் வழித் துணையாகவும் இரண்டு ஆசிரியர்கள்கூடவேசென்றிருந்தனர்.இந்தநிலையில் அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் மாணவர்களைப் பிடித்து விசாரிக்க கூடவே வந்திருந்த ஆசிரியர்கள் இருவரும் தலைமறைவாகிவிட்டனர்.

மாணவர்களிடம் இருந்த பிரசார அட்டைகளைப் பறித்துக் கொண்டு அவர்களை எச்சரிக்கை செய்து பாடசாலைக்கு அனுப்பி வைத்த பொலிசார். பின்னர் பாடசாலைக்குச் சென்று அதிபரிடம் இதுபற்றி விசாரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அன்றைய தினம் பளை மாசார் அ.த.க.பாடசாலையிலும் பாடசாலை நேரத்தில் இதே பிரசார அட்டைகளை அதிபர் திருமதி தயாநிதியின் ஒத்துழைப்புடன் சிறிதரன் வழங்கியிருக்கிறார்.

பாடசாலை அதிபராக இருந்த சிறிதரன் தன்னுடைய தேர்தல் வெற்றிக்காக, தேர்தல் விதிமுறைகளை மீறி இப்படிக் கீழ்த்தரமானவேலைகளைச்செய்வதுகண்டிக்கப்பட வேண்டியது. சிறீதரன் என்ற தனி ஒரு மனிதனின் சுயநலத்துக்காக பல நூறு மாணவர்களின் கல்வி பாழாய்ப் போவது, அவர்களின் கல்வி கற்கும் உரிமை பறிக்கப்படுவது குறித்து கல்விச் சமூகம் பாராமுகமாக இருப்பது ஆரோக்கியமானதல்ல.

இது மட்டுமல்லாமல், ஆரம்பப்பள்ளிகளில் கூட தேர்தல் பிரசார அட்டைகளை சிறிதரன் விநியோகித்து வருகிறார். முன்பள்ளிப் பிள்ளைகளின் புத்தகப்பைகளில் அவர்களுக்கு தெரியாமலேயே தேர்தல் பிரசார அட்டைகளை சிறீதரனின் பிரசார குழுவினர் வைத்து விடுகிறார்கள். கிளிநொச்சியின் முதன்மை முன்பள்ளியான ஆதவன் முன்பள்ளி தொடக்கம் பல முன்பள்ளிகளில் இப்படி நடக்கிறது.

தமது பிள்ளைகளின் எதிர்காலம், கல்வி கற்றல் செயல்பாடுகள் பாதிக்கப்படுவது தொடர்பில் மாகண வட சபையின் கல்வி அமைச்சர் குருகுலராஜாவிடம் தாம் முறையிட்டும், அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தமது பிள்ளைகளின் கல்வி கற்கும் உரிமை பாதிக்கப்படுவது பறிக்கப்படுவது தொடர்பில் எவ்வித அக்கறையுமற்று அவஉ செயல்படுவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் மிகுந்த மனவருத்தமும் கவலையும் தெரிவிக்கின்றனர்.

## முதியோர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அற்றுப்போகும் சூழல் ஏற்படும் எனவும் இது அபாயகரமானதொரு நிலை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை வேட்பாளராக போட்டியிடும் ஜதீந்திரா இபப்டி கூறியிருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே எழுந்துள்ள போட்டிகளும், முரண்பாடுகளும் மேலும் அதிகரித்து வருவதையே வெளிப்படுத்தியுள்ளது.

# ஐ.தே.க. விற்கு உதவிய சுமந்திரனுக்கு தெகிவளையில் சொகுசு பங்களா...



## – சென்னை மாணவர்கள் எதிர்ப்பு போராட்டம்!

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள்தேசியப்பட்டியல்நாடாளுமன்றஉறுப்பினரும், தற்போதையயாழ். மாவட்ட வேட்பாளருமாகிய சுமந்திரனுக்கு எதிராக, தமிழகத்தின் மாணவர் – இளைஞர் கூட்டியக்கம் என்றழைக்கப்படும் மாணவர் இயக்கம் ஒன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளது.

சிங்கள பாசிச அரசு ஈழத்தில் நடத்திய தமிழினப் படுகொலையை இருட்டடிப்புச் செய்து சிங்கள அரசின் கைக்கூலியாக செயல்படும் சுமந்திரன், சர்வதேச விசாரணையிலிருந்து சிங்கள அரசை காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக மேற்படி ஆர்பாட்டத்தை ஒழுங்கமைத்த தெரிவித்த மாணவர்கள் தெரிவித்தனர்.,

மார்ச் மாதம் வெளிவரவிருந்த ஐ.நா விசாரணை அறிக்கையை தள்ளி வைத்து கால நீடிப்புச்செய்து உதவுமாறு ரணில் விக்கிரமசிங்காவும் – மங்கள சமரவீராவும் சுமந்திரனிடம்கேட்டுக்கொண்டதற்குஅமைவாக, சுமந்திரன் அரசின் பிரதிநிதியாக ஜெனிவா பயணம் செய்து தனக்கு வழங்கப்பட்ட பணியை அரசின் விசுவாசியாக சிறப்பாக செய்து அதற்கான சன்மானமாக கொழும்பு தெஹிவளை பகுதியில் சொகுசு பங்களா வீடொன்றையும், சொகுசு வாகனம் ஒன்றையும் பெற்றுள்ளதாகவும் மாணவ அமைப்பினர் தெரிவித்தனர்.

ஈழத்தில் இடம்பெற்ற ஒன்றரை இலட்சம் உயிர்த்தியாகங்கள், தமிழகத்தில் முத்துக்குமார் – செங்கொடி உள்ளிட்ட ஏராளமான ஈகியர்களின் உயிர்க்கொடைகள், மற்றும் புலம்பெயர் உறவுகள் கால்நடை பவனி, கையெழுத்து வேட்டை என்று பல முனைகளில் முன்னெடுத்துவரும் போராட்டங்களின் உச்சக்கட்ட பலனை தமிழ் மக்கள் நாம் அநுபவிக்க வேண்டுமாக விருந்தால், எமது யாழ்ப்பாண உறவுகளின் வாக்களிப்பு: சுமந்திரனின் அரசியலுக்கான சவப்பெட்டியில் கடைசி ஆணியை அறைந்ததாக இருக்க வேண்டும். என்றும் தெரிவித்தனர்.




# வெளியாகியது முதலமைச்சர் வீடியோ அதிர்ச்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு




வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போலித்தனத்தை அப்பட்டமாக புட்டு வைத்து வழங்கிய செவ்வி ஒன்றினைத் தாங்கிய வீடியோ காட்சிகள் இணையங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியாகி தமிழ் கூட்டமைப்பை மிக அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் அந்தரங்க விடயங்கள் பற்றி இந்தச் செவ்வியில் அப்பட்டமாகத் தெரிவித்துள்ளார் வடக்கு முதலமைச்சர்.

நான் இவற்றைச் சொலவதன் மூலம் பெரும் பிரச்சனைகளை எதிர் நோக்குவேன் என்றாலும். இதை வெளிப்படுத்தாமல் இருந்தால் நான் மக்களுக்கு துரோகம் இழைத்தவன் ஆகிவிடுவேன் என்றும் தெரிவித்த முதலமைச்சரின் கருத்துக்களில்.

1.தமிழ் தலைமைகளுக்கு வயசாகி விட்டது. தலைவர்களாக இருப்பவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

2.தமிழர்களுக்கு அடுத்து வரப்போகும் தலைமைகளாக உள்ள இளையவர்களின் தமைமைத்துவத்தை கூட்டமைப்பு ஏற்படுத்தவில்லை. இதை நான் தமிழ்த் தலைமைகளுக்கு சொல்லியும் அவர்கள் செய்யவில்லை. மாவை சேனாதிராஜா இதைக் கேட்டுவிட்டு ஓம் பாருங்கோ தலைமைகளை உருவாக்கத்தான் வேண்டும் என்று கூறிவிட்டு செல்வாரே தவிர எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

3.தமிழர்களுக்கு நடக்கும் அநியாயங்கள் தொடர்பாகவும். தேவைகள் தொடர்பாகவும். பிரச்சனைகள் தொடர்பாகவும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் கதைப்பதில்லை.அத்துடன் அதனை வெளி உலகிற்கும் எடுத்துச் சொல்வதில்லை.

4).நான் தீவிரவாதக் கருத்துக்களை கூறுவதாக என்னை கூட்டமைப்பினர் எச்சரிக்கின்றனர். நான் கொழும்பில் பிறந்து வளர்ந்தவன். ஆனால் இங்கு வந்தபின்னர் மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் பிரச்சனைகளை அறிந்த பின்னரே எனக்கு இவ்வாறான நிலைப்பாடு எடுக்க தோன்றியது. குறித்த மக்களால்தான் என்னை மாற்றினார்கள்.

5).மக்களின் பிரச்சனைகளை அறிந்த எனக்கு 13வது திருத்தச்ச சட்டம் பற்றி பாராளுமன்றிலோ அல்லது வேறு எங்கிலோ கதைத்துக் கொண்டிருப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. அவர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்றால் தமிர்களுக்கு மேலதிக அதிகாரம் தேவை.

6).தமிழ்த் தலைமைகள் மக்களோடு மக்களாக வாழ்ந்தால் தான் மக்களின் பிரச்சனைகளை அறிந்து கொள்ளலாம். அதை விட்டுவிட்டு அந்த அந்த நேரத்திற்கு மாத்திரம் வந்து மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டுச் செல்பவர்களையும் தமது குடும்பங்கள். பிள்ளை குட்டிகளை வெளிநாடுகளில் தங்க வைத்துவிட்டு தமிழர்களையும் தமிழ்த்தேசியத்தையும் வைத்து வியாபாரம் செய்வதையும் அனுமதிக்க முடியாது.

7).இவ்வாறு இருப்பவர்களுக்கு நான் ஒருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டேன். ஒரு போதும் அவர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய மாட்டேன். நான் நடுநிலையாகவே இருப்பேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இல. 372. பிரதான வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அற்புதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
A Special Edetion of "Thinamurasu"